தினக்குரல்
யாழ்
தினக்குரல்
THINAKKURAL
AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL
Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com
ஓசை : 020 குரல் : 272 சனிக்கிழமை 11 டிசம்பர் Saturday 11th December 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 30/= பக்கங்கள் : 12

## இலங்கையில் நேற்று கொரோனா தொற்று 567

இலங்கையில் மேலும் 567 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 571,239 ஆக அதி பக்கம் 02

## புதிய எரிவாயு சிலிண்டர்களும் வெடிக்கின்றன !

க.பிரசன்னா

புதிய பொலித்தீன் சீல் வைக்கப்பட்டுள்ள எரிவாயு சிலிண்டரை கொள்வனவு செய்யுமாறு நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை பொதுமக்களுக்கு அறிவித்திருந்த நிலையில் புதிய லேபலின் கீழ் பக்கம் 02

### -வெளிநாடுகளுக்கான கடன் அடுத்த ஆண்டு செலுத்தி முடிக்கப்படும்-

# கடன் இல்லாத நாட்டையே சஜித்துக்கு கொடுப்போம்

### -கடனுடன் நாட்டை கொடுக்க மாட்டோம் என்கிறார் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச-



பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

நாங்கள் வெளிநாடுகளுக்கு செலுத்த இருக்கின்ற ஒவ்வொரு டொலரும் அடுத்த ஆண்டு செலுத்தி முடிக்கப்படும் என்பதனை ஜனாதிபதி, பிரதமரை சாட்சியாக வைத்து உறுதியுடன் இங்கு கூறுகின்றேன் எனத்தெரிவித்த நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச, அடுத்த வருடம் சஜித் அரசு வரும் என்று கூறினார்கள். அப்படி அவர் ஆட்சி வரும்போது நாம் கடன் இல்லாத நாட்டைத்தான் அவருக்கு கொடுப்போம். கடனுடன் நாட்டை கொடுக்க மாட்டோம் என்றார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிதி அமைச்சு, பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சு, நிதி மூலதன சந்தை பக்கம் 02

## அடுத்த இரு வாரங்களுக்குள் பூஸ்டரை செலுத்தி முடிக்கவும்

### -ஜனாதிபதி பணிப்புரை-



எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் கொவிட் தொற்றுப் பரவல் ஏற்படுவதைக்கட்டுப்படுத்துவதற்காக, அடுத்த இரண்டு வாரங்களுக்குள் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றலை முழுமைப்படுத்துமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ , கொவிட் தொற்றுப் பரவலை கட்டுப்படுத்துவதற்கான விசேட குழு உறுப்பினர்களுக்கு பணிப்புரை விடுத்தார்.

வெள்ளிக்கிழமை முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கொவிட் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் விசேட கலந்துரையாடலின் போதே ஜனாதி பக்கம் 02

### -அடுத்த ஆண்டு கொவிட்-

## தொற்று முடிவுக்கு வரும்

### -பிரதமர் மகிந்த நம்பிக்கை-



பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

அடுத்த வருடத்தில் கொவிட் தொற்று நிலைமை முடிவுக்கு வந்து நாட்டின் பொருளாதாரத்தை திட்டமிட்டவாறு முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்ல முடியுமாக இருக்கும் என்று எதிர்பார்ப்பதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிதி அமைச்சு, பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சு ,நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில் பக்கம் 02

## தமிழ் பேசும் மக்களை பிரிப்பதற்கு முயற்சி

### -சாணக்கியன் எம்.பி.குற்றச்சாட்டு-



பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

தமிழ் பேசும் மக்களை பிரிப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யான இரா.சாணக்கியன் குற்றம் சாட்டினார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிதி அமைச்சு, பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சு, நிதி மூலதன பக்கம் 02

## பிளாஸ்ரிக் கான்களில் உரமும் வெடிக்கிறது

### -இறக்குமதியால் 700 கோடி ரூபா இழப்பு-

க.பிரசன்னா

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட திரவ நனோ நைட்ரஜன் உரம் அடங்கிய பிளாஸ்ரிக் கான்கள் வெடித்தமை தொடர்பில் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

திரவ சேதன பசளை இறக்குமதி செய்யப்பட்டதன் மூலம் நாட்டுக்கு 7 பில்லியன் ரூபா(700 கோடி ரூபா ) இழப்பு ஏற்பட்டுள்ளது. சேதன பசளை பக்கம் 02

### -வரவு செலவுத் திட்டத்தின்-

## மூன்றாம் மதிப்பீடு 93 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றம்

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

இலங்கையின் 76 ஆவதும் கோத்தபாய ராஜபக்ச அரசின் 3 ஆவதும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவின் முதலாவதுமான 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாம் மதிப்பீடு 93 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் மூன்றாம் மதிப்பீட்டுக்கு ஆதரவாக 157 வாக்குகளும் எதிராக பக்கம் 02

## ஐ.நா.உதவி செயலாளர் நாயகம் திங்களன்று இலங்கை வருகிறார்

ஐ.நா. வின் உதவிச் செயலாளர்நாயகமும் ஐ.நா.அபிவிருத்தித் திட்டம் (யு.என் .டி.பி.) உதவி நிர்வாகி யும் ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கானயு.என்.டி.பி. யின் பிராந்திய பணியகத்தின் பணிப்பாளருமான திருமதி. கன்னி விக்னராஜா எதிர்வரும் திங்கட்கிழமை இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

ஐந்து நாள் விஜயம்மேற்கொள்ளும் கன்னி விக்னராஜா, நாட்டின் முன்னுரிமைகளை புரிந்துகொள்வது மற்றும் யு.என்.டி.பி.யி லிருந்து இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான புதிய வழிவகைகளை ஆராயும் நோக்கத்துடன் இலங்கைக்கு விஜயம் செய்கிறார். பக்கம் 02

### -பாகிஸ்தானுக்கு தானமாக வழங்கப்பட்ட-

## 35,000 கண்களும் யாருடையது?



பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

இலங்கையால் பாகிஸ்தானுக்கு தானமாக வழங்கப்பட்ட 35000 கண்களும் சிங்களவர்களுடையதா தமிழர்களுடையதா? அவ்வாறு கண்களை தானம் செய்தவர்களின் பெயர் பட்டியல் எங்கே? எனகே கேள்வி எழுப்பிய தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட எம்.பி.யான எஸ்.ஸ்ரீதரன் ஆட்கள் காணாமலாக்கப்பட்ட நிலையில் தற்போது யாழ் கடற்கரையோரத்தில் கரையொதுங்கிய உடல் கூட காணாமலாக்கப்பட்டுள்ளது என்றார். பக்கம் 02

## அனைத்தும் இராணுவத் தளபதி வசமாகும் நிலை

### -டொலர் பிச்சை எடுக்கும் நிலைமை -எதிர்க்கட்சித் தலைவர் சஜித்-

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

நாடு போகிற போக்கைப் பார்த்தால் இறுதியில் மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சரின் பொறுப்புகளையும் இராணுவத் தளபதியிடம் ஒப்படைக்கும் நிலைமை வரலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிதி அமைச்சு ,பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சு, நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு,சமுர்த்தி உள்ளக பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி பக்கம் 02

## ஒமிக்ரோன் வைரஸ் 59 நாடுகளுக்கு பரவல்

உலகை அச்சுறுத்தி வரும் ஒமிக்ரோன் வகை கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நாடுகளின் எண்ணிக்கை 59 ஆக அதிகரித்துள்ளது.

உருமாறிய ஒமிக்ரோன் வகை கொரோனா வைரஸ் பரவல் பல்வேறு நாடுகளில் கண்டறியப்பட்டு வருகிறது. தொற்று பரவலைக் கட்டுப்படுத்த தீவிரமான நடவடிக்கைகளை உலக நாடுகள் மேற்கொண்டு வருகின்றன.

ஒமிக்ரோன் வகை கொரோனா வைரஸ் வேகமாக பரவிவரும் நிலையில், அமெரிக்கா, அவுஸ் பக்கம் 02

## நாடளாவிய ரீதியில் திங்கட்கிழமை முதல் ‘சட்டப்படி வேலை’ தொழிற்சங்க நடவடிக்கை

### -புகையிரத நிலைய அதிபர்கள் சங்கம்-


க.பிரசன்னா

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் தமது கடமைகளை நிறைவேற்றும் போது ஏற்படும் அசௌகரியங்கள் காரணமாக நாடளாவிய ரீதியில் திங்கட்கிழமை முதல் ‘சட்டப்படி வேலை’ தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக புகையிரத நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேதா சோமரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல பகுதிகளில் வினைத்திறனான சமிக்ஞை முறைமைகளை பேணுவதற்கு புகையிரத திணைக்களம் தவறியுள்ளது. 50 வீதத்துக்கும் அதிகமான சமிக்ஞை பக்கம் 02

## 225 எம்.பி.க்களையும் கொல்ல வேண்டுமென்று கூறும் மக்கள்

### -டிலான் எம்.பி. கடும் விசனம்-



பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

நாட்டில் மக்களுக்கு அரசியல் வெறுத்துவிட்டது. அன்று பாராளுமன்றத்திற்கு வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்ட போது எதிர்த்த மக்கள், இன்று ஏன் பாராளுமன்றத்திற்கு குண்டுத்தாக்குதல் நடத்தவில்லை என கேட்கும் நிலை உருவாகியுள்ளது.இதனால் தேர்தலினால் தெரிவுசெய்யப்படாத அதிகாரவர்க்கத்திற்கு நாட்டை கொடுப்போம் என்ற மனநிலைக்கு மக்கள் தள்ளப்படுவார்கள்.அதனால் மக்களை,தேர்தலை சந்திக்காத தரப்பினரால் அரசாங்கத்தை அமைக்கும் சூழல் உருவாகலாம் என அரச தரப்பு எம்.பி. யான டிலான் பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிதி அமைச்சு, பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சு, நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி பக்கம் 02

## பெண்கள் 9 பேர் உட்பட 18 பேர் கொரோனாவுக்கு பலி!

இலங்கையில் பெண்கள் 9 பேர்உட்பட மேலும் 18 பேர் கொரோனாவுக்கு பலியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களில் 09 ஆண்களும், 09 பெண்களும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நேற்று முன்தினம் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கொவிட் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 14,573. ஆக அதிகரித்துள்ளது.

## மாகாண சபை முறைமையை இல்லாமல் செய்ய அரசு முயற்சி

### -சுவிஸ் தூதுவரிடம் த.தே.கூ சுட்டிக்காட்டு-

இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் ஊடாக கொண்டு வரப்பட்ட மாகாண சபை முறைமை யை இல்லாமல் செய்ய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக சுவிஸ் தூதுவருடனான சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வினோ நோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இலங்கை அரசியல பக்கம் 02

## அனைத்தும் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒக்ரோபர் 28 மற்றும் நவம்பர் முதலாம் திகதியும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி தனிப்பட்டவர்களுக்காக வெளிநாட்டு பணம் மற்றும் பொருட்கள், சேவைகள் வருமானத்தை தற்போது மத்திய வங்கி பலவந்தமாக கையாண்டு வருகின்றது. இதனை எப்படி மத்திய வங்கி தீர்மானிக்க முடியும் என்று கேட்கின்றோம். இது டிசம்பர் 7 ஆம் திகதி முதல் செயற்படுத்தப்படுகின்றது. இதுவா அந்நிய செலாவணி பிரச்சனைக்கான தீர்வு என்று கேட்கின்றேன்.

பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து முன்னெடுக்கும் செயற்பாடுகளால் பாரதூரமான நிலைமையே ஏற்படும். இதனால் ஏற்றுமதியாளர்கள் இலங்கைக்கு வெளியே அலுவலங்களை அமைத்து இலாபம் தேடும் நிலைமையே ஏற்படும். இதனால் எமது நாட்டுக்கு வரும் அந்நிய செலாவணி குறைந்துகொண்டே போகும். இறுதியில் நிதி அமைச்சருக்கும் அந்நிய செலாவணி பிரச்சினையை, பொருளாதார பிரச்சனையை தீர்க்க முடியாவிட்டால் அந்த அமைச்சின் பொறுப்பையும் இராணுவத் தளபதியிடம் கொடுக்க வேண்டி வரலாம். நாடு ஆபத்தான நிலைக்கு சென்றுகொண்டிருக்கின்றது என்றார்.

## மூன்றாம் மதிப்பீடு 93 ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

64வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையிலேயே93 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

வரவு-செலவுத்திட்டத்தின் மூன்றாம் மதிப்பீட்டுக்கு எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. வாக்கெடுப்பை கோரியதனையடுத்து இலத்திரனியல் முறைப்படி மாலை 6.05 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின்மூன்றாம் மதிப்பீடு மீது நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் ஆதரவாக அரச தரப்புடன் இணைந்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் அநுராதபுரம் மாவட்ட எம்.பி.யான இஷாக் ரஹமான், பதுளை மாவட்ட எம்.பி.யான அரவிந்த குமார் தேசியப்பட்டியல் எம்.பி.யான டயானா கமகே,மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக்கட்சிகளாகவுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எம்.பி.க்களான ஹரீஸ்,பைசல் ஹாசிம்,தௌபீக் ,நசீர் அஹமட், முஸ்லிம் தேசிய கூட்டணியின் புத்தளம் மாவட்ட எம்.பி.யான அலிசப்ரி ரஹீம் ,அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் திகாமடுல்ல மாவட்ட எம்.பி. யான முஷாரப், சுயேச்சையாக செயற்படும் எம்.பி.யான அத்துரலிய ரத்தின தேரர் ஆகியோர் வாக்களித்தனர்.

அதேவேளை 2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின் மூன்றாம் மதிப்பீட்டுக்கு எதிராக எதிர்க்கட்சிகளான சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி,இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே .வி.பி. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஆகியன வாக்களித்தன ,ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. குமார வெல்கம் உட்பட 4 எம்.பி. க்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட சட்டமூலம் ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் இரண்டாவது வாசிப்பு கடந்த 12 ஆம் திகதி நிதி அமைச்சர் பசில்ராஜபக்சவினால் சபையில் முன்வைக்கப்பட்டு சுமார் இரு மணிநேரம் வரவு-செலவுத்திட்ட உரையாற்றியிருந்தார்.

இந்நிலையில் மறுநாள் 13ஆம் திகதி சனிக்கிழமை முதல் 22ஆம் திகதி திங்கட்கிழமை வரை ஏழு நாட்கள் வரவு-செலவுத்திட்ட இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதம் இடம்பெற்ற நிலையில் அன்று மாலை 5.10 மணிக்கு இரண்டாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு நடைபெற்றது.இதன்போது ஆதரவாக 153 வாக்குகளும் எதிராக 60வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் 93 மேலதிக வாக்குகளினால் இரண்டாம் மதிப்பீடு நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின் இதுவரையான விவாதங்களில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு தலைவர் அலி சப்ரி ரஹீம் ஆகியோர் உரையாற்றவில்லை.

## 35000 கண்களும் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிதி அமைச்சு, பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சு ,நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு,சமுர்த்தி உள்ளக பொருளாதார ,நுண்நிதிய ,சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இது தொடர்பில் கேள்வி எழுப்பிய ஸ்ரீதரன் எம்.பி. மேலும் கூறுகையில்,

பாகிஸ்தானில் இலங்கையரான பிரியந்த குமார அடித்து க்கொலை செய்யப்பட்டபோது அங்குள்ள கண் வைத்தியர் ஒருவர் கூறியதாக ஊடகங்களில் ஒரு செய்தி வெளியானது. இலங்கையிலிருந்து 35000 கண்கள் தானமாக பாகிஸ்தானிலுள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டதாக பாகிஸ்தானின் கண் சிகிச்சை நிபுணர் ஒருவர் கூறியுள்ளார் என்பதே அந்த செய்தி. இது உண்மையா பொய்யா ?இவ்வாறு 35000 கண்கள் பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் அவை யாருடைய கண்கள்? அவ்வாறு வழங்கப்பட்டிருந்தால் அவ்வாறு வழங்கியவர்களின் பெயர் பட்டியல் எங்கே? இந்த கண்கள் சிங்களமக்களுடைய கண்களா அல்லது தமிழ் மக்களினுடைய கண்களா ?யாருடைய கண்கள் அவ்வாறு தானம் செய்யப்பட்டன ?இது பொய்யென்றால் பாகிஸ்தானின் ஒரு பிரபல வைத்தியர் ஏன் பொய் கூறுகின்றார் ?இவையெல்லாம் எமக்கு முன்னாலுள்ள பெரிய கேள்விகள்.

## பிளாஸ்ரிக் கான்களில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடங்கிய கான்கள் வெடிப்பது, கசிவு மற்றும் கான்களின் மூடிகள் திறத்தல் போன்ற செயற்பாடுகளின் காரணமாக விவசாயிகள் மற்றும் விவசாய சேவை நிலையங்களின் அதிகாரிகள் அச்சத்தில் உள்ளனர்.

இறக்குமதி செய்யப்பட்ட திரவ சேதன பசளை தரமானதாயின் அவ்வாறான வெடிப்புக்களுக்கு காரணம் என்ன?. இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட இரசாயன உரத்தின் காப்புரிமை அந்நிறுவனத்துக்கே காணப்படுகின்றது. எனவே இலங்கைக்கு நனோ நைட்ரஜன் உரத்துக்குப் பதிலாக நனோ யூரியா உரமே இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இரசாயன உரங்களின் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்ட நிலையில் சீனாவிலிருந்து சேதன பசளையினை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எனினும் சேதன பசளை மாதிரிகளில் தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிரிகள் காணப்படுவதாக கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் குறித்த பசளைக்கு தடை விதிக்கப்பட்டது.

சேதன பசளையை இறக்குமதி செய்வதற்காக சீன நிறுவனத்திடம் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்ட நிலையில் இந்தியாவிலிருந்து திரவ நனோ நைட்ரஜன் பசளையினை இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் திரவ நைட்ரஜன் பசளை தொடர்பிலும் சர்ச்சைகள் எழுந்த நிலையில் மீண்டும் இரசாயன உர இறக்குமதிக்கு கடந்த மாதம் முதல் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

## மாகாண சபை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் ஊடாக கொண்டு வரப்பட்ட மாகாண சபை முறமை யை இல்லாமல் செய்ய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றமை பற்றியும், அதே போல் அதிகாரங்களை பகிர்வதை விரும்பாமல் இருக்கிற அதிகாரங்களைக் கூட பறித்தெடுப்பதிலிலும், மாகாண சபை தேர்தலை நடத்தாமல் இழுத்தடிப்பு செய்வது தொடர்பாகவும், சுவிஸ் நாட்டின் இலங்கைக்கான தூதுவரிடம் தெளிவுபடுத்தியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.

சுவிஸ் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் டொமினிக் வர்கலர் மற்றும் அரசியல் துறை செயலாளர் சிடோனியா கபிரியல் அம்மையார் ஆகியோருடனான சந்திப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கிய குழுவினர் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொழும்பில் உள்ள தூதரகத்தில் சந்தித்து கலந்துரையாடி உள்ளனர்.

குறித்த சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வினோ நோகராதலிங்கம், கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரம், ரெலோ கட்சியின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் குருசாமி ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

## கடன் இல்லாத ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு, சமுர்த்தி உள்ளக பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுயயாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

எதிர்க்கட்சியினர் இங்கு கூறிய விடயங்களை நான் சவாலுக்குட்படுத்தவில்லை. வெளிநாட்டு ஒதுக்கங்கள், நிதி நெருக்கடிகளில்நாங்கள் இருக்கின்றோம்.ஆனாலும் நாங்கள் செலுத்த இருக்கின்ற ஒவ்வொரு டொலரும் அடுத்த ஆண்டு செலுத்தி முடிக்கப்படும் என்பதனை ஜனாதிபதி, பிரதமரை சாட்சியாக வைத்து உறுதியுடன் இங்கு கூறுகின்றேன். எமது இன்றைய நிதி பற்றாக்குறைகளுக்கு கொரோனா எப்படி ஒரு காரணமோ அதேபோன்று கடந்த 5 வருட ஆட்சியும் ஒரு காரணம் என்பதனை மறுக்க முடியாது.

வெளிநாடுகளுக்கு தொழிலுக்கு எம்மவர்கள் செல்வது குறைந்ததும் எமக்கு வெளிநாட்டுப்பண அனுப்பல் குறைவடையக் காரணமாக இருந்தது. 2,30,000 பேர் வருடமொன்றுக்கு சென்ற நிலையில் அது தற்போது 53,000 ஆக குறைவடைந்துள்ளது. அதனால் வெளிநாட்டு தொழிவாய்ப்புக்களை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

## தமிழ் பேசும் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு,சமுர்த்தி உள்ளக பொருளாதார ,நுண்நிதிய ,சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றம்சாட்டிய அவர் மேலும் கூறுகையில்,

அரசாங்கத்தின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிராக வடக்கு கிழக்கிலுள்ள அனைத்து தமிழ் பேசும் எம்.பி.க்களும் வாக்களிக்க வேண்டும்.விசேடமாக நீங்கள் தமிழ் பேசும் எம்.பி.யாக இருந்தால், இதற்கு ஆதரவாக வாக்களிக்க நீங்கள் சில நிபந்தனைகளை விதிக்க வேண்டும்.

நீண்டகாலமாக சிறைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, முகநூல் பதிவுகளுக்காக சிறைகளிலுள்ளவர்களின் விடுதலை, வடக்கு - கிழக்கில் இடம்பெறும் காணி அபகரிப்பினை தடுத்து நிறுத்துங்கள். என நிபந்தனைகளை வைத்து நீங்கள் வாக்களிக்கலாம்.

அதேபோன்று முஸ்லீம் எம்.பி. க்களாக இருந்தால், உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களின் விடுதலை, கொரோனாவினால் உயிரிழப்போரின் ஜனாசாக்களை ஓட்டமாவடியில் அடக்கம் செய்வதனை நிறுத்துங்கள், ஞானசார தேரர் தலைமையிலான செயலணியினை கலையுங்கள். உள்ளிட்ட நிபந்தனைகளை வைத்து நீங்கள் வாக்களிக்கலாம். மேலும் அண்மையில் கிண்ணியாவில் படகுவிபத்தில் உயிரிழந்த சிறுவர்களை நினைத்துக் கொண்டு நீங்கள் அனைவரும் வரவு - செலவுத்திட்டத்திற்கு வாக்களிக்க வேண்டும். அங்கே சிறுவர்கள் உயிரிழந்த நிலையில் இங்கே களனிபாலம் திறந்து வைக்கப்பட்டிருந்தது. அதனையும்
நீங்கள் சிந்தித்து பார்க்க வேண்டும்.

அத்துடன், இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களை பிரிப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கு பிள்ளையானும் துணைபோகின்றார் என்றார்.

## 225 எம்.பிக்களையும் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு,சமுர்த்தி உள்ளக பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே தெரிவித்த மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ எதிர்பார்த்த பொறிமுறை மாற்றம் இன்று இடம்பெற்றுள்ளது. இன்று பிரதான எதிர்க்கட்சியினர் இனவாதத்திற்கு எதிராக பேசுகின்றனர். ஆனால் வடக்கு-கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மக்கள் பிரதிநிதிகளை உரையாற்றக்கூட அனுமதிக்காத எதிர்க்கட்சி சட்ட ஆட்சி பற்றிப்பேசுகின்றது. நீதியின் சுயாதீனம் பற்றி பேசும் இவர்கள் ஆட்சியில் நீதித்துறையை கையில் எடுத்து செய்த செயற்பாடுகள் என்னவென்பது எமக்கும் தெரியும். அவ்வாறான நிலையில் இருந்து ஜனாதிபதி நாட்டை மாற்றியுள்ளார்.

## ஒமிக்ரோன் வைரஸ் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரேலியா உள்ளிட்ட நாடுகளிலும் ஒமிக்ரோன் கொரோனா கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஒமிக்ரோன் கொரோனா தொற்றால் பாதிக்கப்படும் நாடுகளின் எண்ணிக்கை 59 ஆக உயர்ந்துள்ளது.

தற்போது உலகின் 59 நாடுகளில் ஒமிக்ரோன் தொற்று பரவல் கண்டறியப்பட்டுள்ளதுடன் இதுவரை 2,936 பேருக்கு ஒமிக்ரோன் வகை கொரோனா தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சர்வதேச நாடுகளுடன் ஒப்பிடுகையில் பிரிட்டனில் அதிகபட்சமாக 817 பேரும், டென்மார்க்கில் 796 பேரும் தென்னாபிரிக்காவில் 431 பேரும் ஒமிக்ரோன் வகை கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## ஐ.நா. உதவி ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக சமீபத்தில் முடிவடைந்த ஐ. நா. காலநிலை மாற்ற மாநாட்டின் சிஓ பி .26,பிராந்தியத்தில் கோவிட் -19 க்குப் பின்னரான சமூக-பொருளாதாரமீட்பு, நாட்டிற்கு அதிகளவு அபிவிருத்திக்கான நிதியுதவியைப் பயன்படுத்துதல்போன்ற விடயங்களில்அவர் கவனம் செலுத்துவார்.

உத்தியோகபூர்வ விஜயதின்போது மனித அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல், நிலையான அபிவிருத்தி இலக்குகளை விரைவுபடுத்துதல்ஆகியவற்றில் கவனம் செலுத்தும் அதேவேளை இலங்கையின் மனித அபிவிருத்தி சாதனைகள் விஜயத்தின்போது முக்கியமாகக் கொண்டாடப்படவுள்ளது.

உதவி செயலாளர்நாயகம் விக்னராஜாதனது விஜயத்தின் போது அரசாங்க உயர்மட்டஅதிகாரிகள் மற்றும் ஏனைய பங்காளிகளைச் சந்திப்பார், அத்துடன் ஐ.நா. ஆதரவுடன் களத்தில் மேற்கொள்ளப்படும் சில வேலைத்திட்டங்களையும் அவர் நேரடியாகப் பார்வையிடுவார்.

## நாடளாவிய ரீதியில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைமைகள் சேதமடைந்துள்ளதால் பெரும்பாலான புகையிரதங்கள் பயணிப்பதில் தாமதங்கள் ஏற்படுகின்றன. இதுபோன்ற சேதமடைந்த கட்டமைப்புகள் பயணிகளின் உயிருக்கும் ஆபத்தை விளைவிக்கும். தமது கடமைகளை நிறைவேற்றும் போது ஏற்படும் பல அசௌகரியங்கள் காரணமாக, நாடளாவிய ரீதியில் திங்கட்கிழமையன்று சட்டப்படி வேலை செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

செயற்பாட்டிலுள்ள புகையிரத கடவைகளில் இருந்து அகற்றப்பட்ட பகுதிகளின் மூலம் செயற்பாடற்ற புகையிரத கடவைகளை திருத்தியமைப்பதற்கு திறமையற்ற நிலையில் இலங்கை புகையிரத திணைக்களம் இருக்கின்றது. அத்துடன் புகையிரத நிலைய அதிபர்களின் பதவி உயர்வுகள் மற்றும் ஆட்சேர்ப்பு கொள்கைகளை புதுப்பிக்கக் கோரி இத்தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாவிட்டால் எதிர்வரும் 26ஆம் திகதிக்கு பின்னர் அனைத்து தொழிற்சங்க உறுப்பினர்களும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

## இலங்கையில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரித்துள்ளது.

இவர்களில் 12,466 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதேவேளை,கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 377 பேர் இன்று குணமடைந்துள்ளனர். அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 544,200 ஆக அதிகரித்துள்ளது.

## அடுத்த இரு வாரங்களுக்குள் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதி இதனைத் தெரிவித்தார்.

இரண்டாவது டோஸ் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டு 3 மாதங்கள் நிறைவடைந்த அனைவரும் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதி பெறுவர். அதன்படி, தடுப்பூசி வழங்கப்படும் எந்தவோர் இடத்திலும் இன்று முதல், தினசரி பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கேற்ப, இன்றைய நாட்களில் அடையாளம் காணப்படும் கொவிட் நோயாளிகளில் அதிக சதவீதமானவர்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளாதவர்களாக இருப்பதுடன், அவர்களில் பெரும்பாலானவர்கள் இள வயதுடையவர்கள் என்று சுகாதாரப் பிரிவு அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

## புதிய எரிவாயு சிலிண்டர்களும் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விநியோகம் செய்யப்பட்ட எரிவாயு சிலிண்டரிலும் வெடிப்பு சம்பவம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்து ஹங்குராங்கெத்த பிரதேசத்தில் இருந்து பதிவாகியுள்ளது. இது தொடர்பில் தகவல் கிடைக்கப்பெற்று விசாரணை நடத்தப்பட்டு வருவதாக நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

எரிவாயு கலவையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்படுவதாக தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டதுடன் விநியோகிப்பட்ட எரிவாயு சிலிண்டர்களை திரும்பப்பெறுமாறு அறிவுறுத்தப்பட்டது.

## தொற்று முடிவுக்கு வரும் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு, சமுர்த்தி உள்ளக பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் விவாதத்தில் உரையாற்றும் போது தெரிவிக்கையில்,

சவால்களை வெற்றிக்கொள்ளக் கூடியவாறு பொருளாதார கொள்கைத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். இந்த கொள்கைத் திடடங்கள் தற்காலத்தை போன்று எதிர்கால சவால்களுக்கும் முகம் கொடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அனைத்து திட்டங்களும் முறையான புள்ளிவிபரங்களுடன் முன்னெடுக்கப்பட வேண்டும். இதேவேளை கொவிட்டுக்கு பின்னரான நெருக்கடி நிலைமையில் பெரும்பாலான நாடுகளை போன்று இலங்கையும் பொருளாதார அபிவிருத்தியில் கடுமையான நிலையில் இருக்கின்றது. அந்த சவாலை வெற்றிக்கொண்டும் நிலையான பொருளாதார மறுசீரமைப்பை செய்வதற்காகவும் தேவையான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் வருடத்திற்குள் கொவிட் தொற்று நிலைமை முடிவடைந்து எமது பொருளாதாரத்தை மிகவும் திட்டமிட்டவாறும் மற்றும் செயற்திரனான வகையிலும் கொண்ட செல்ல முடியுமாக இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அதற்கு ததேவையான பொருளாதார கொள்கை மற்றும் திட்டங்கள் செயற்படுத்தல் அமைச்சு பெரும் பங்களிப்பை வழங்கும் என்றார்.

# அடுத்த வருடம் முதல் இரு தடுப்பூசி செலுத்தியிருப்பது கட்டாயமாக்கப்படும்

## -சுகாதார அமைச்சர் கெஹலிய-



க.பிரசன்னா

இலங்கையில் கொவிட் தடுப்பூசியினை கட்டாயமாக்குவது தொடர்பில் அரசாங்கம் ஆலோசனை மேற்கொண்டு வரும் நிலையில் அடுத்த வருடம் முதல் கொவிட் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களை பெற்றுக்கொள்வது கட்டாயமாக்கப்படுமென சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இந்த நடைமுறையினை இறுதி செய்வதற்கு மூன்று மாதங்கள் செல்லும். ஒவ்வொருவரும் கொவிட் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் எவ்வித சமரசமும் இல்லையெனவும் அதற்கான சட்ட நடைமுறைகள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

கொவிட் தடுப்பூசியின் இரண்டு தடுப்பூசிகளில் ஒன்றை செலுத்திக் கொண்டமைக்கு தடுப்பூசி அட்டைகளுக்குப் பதிலாக செயலியொன்றை அறிமுகப்படுத்துவது தொடர்பில் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

முன்னதாக பொது இடங்களுக்கு செல்லும்போது கொவிட் தடுப்பூசி அட்டையினை கட்டாயமாக்குவதற்கு சட்டரீதியாக எவ்வித தடையும் இல்லையென சட்டமா அதிபர் அறிவித்திருப்பதாக தெரிவித்திருந்தார்.

நாட்டில் தற்போது கொவிட் தடுப்பூசியின் மூன்றாவது டோஸ் வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் 60 வயதுக்கும் மேற்பட்ட 67 ஆயிரம் நபர்கள் இன்னும் தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளவில்லை என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. தடுப்பூசிகள் மீது காணப்படும் தேவையற்ற அச்சம் காரணமாக பலர் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதில் தயக்கம் கொண்டுள்ளனர்.

இதேவேளை நாட்டின் சனத்தொகையில் 20 வயதுக்கும் மேற்பட்டவர்களில் 94 வீதமானோர் முழுமையாக தடுப்பூசியினை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் 20 வயதுக்கு மேற்பட்டவர்களில் 101.7 வீதம் பேர் கொவிட்-19 தடுப்பூசியின் முதல் டோஸைப் பெற்றுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# 2022 ஆம் ஆண்டின் முதலாவது பாராளுமன்ற அமர்வு ஜனவரி 11



பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்

2022ஆம் ஆண்டுக்கான பாராளுமன்ற அமர்வுகளை எதிர்வரும் ஜனவரி 11 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக தெரிவித்தார்.

இதற்கமைய எதிர்வரும் ஜனவரி 11, 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 11ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குப் பாராளுமன்றம் கூடவிருப்பதுடன் முற்பகல் 10 மணி முதல் முற்பகல் 11 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் மு.ப 11 மணி முதல் மாலை 4.30 மணி வரை மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அன்றையதினம் அரசாங்கத்தின் தினப்பணிகளின் பின்னர் ஸ்ரீ சாக்கியசிங்காராம விகாரஸ்த கார்யசாதகசங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் இரண்டாவது வாசிப்பைத் தொடர்ந்து சட்டவாக்க நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படவிருப்பதாகவும் செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

ஜனவரி 12ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குக் கூடவிருப்பதுடன், முற்பகல் 10 மணிமுதல் 11 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. முற்பகல் 11 மணி முதல் மாலை 4.30 மணி வரை குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்)சட்டமூலம், ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளைத் தடைசெய்தல் சட்டமூலம், நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்)சட்டமூலம் போன்றவை இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்துக்குளடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

ஜனவரி 11 மற்றும் 12ஆம் ஆகிய தினங்களில் மாலை 4.30 மணி முதல் 4.50 மணிவரை சபைஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், 4.50 மணி முதல் பி.ப 5.30 மணிவரையான காலப் பகுதியில் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை மீதான விவாதமும் இடம்பெறும்.

அத்துடன், ஜனவரி 13 ஆம் திகதி முற்பகல் 10 மணி முதல் மாலை 4.30 மணி வரைமறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தொடர்பான அனுதாபப் பிரேரணை மீதான விவாதத்தை நடத்த இங்கு தீர்மானிக்கப்பட்டதாகவும் செயலாளர் நாயகம் மேலும்தெரிவித்தார்.

# 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு திங்கள் முதல் மூன்றாவது தடுப்பூசி




கொவிட்-19 தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் 30 வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றும் 18 வயதிற்கு மேற்பட்ட பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்குவகிக்கும் தொழிலாளர்கள் மற்றும் நோய்பரவும் ஆபத்துள்ள தரப்பினருக்கும் நாளை மறு தினம் திங்கட்கிழமை முதல்; வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் வழங்கப்பட உள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் 18 வயதிற்கு மேற்பட்ட பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்குவகிக்கும் தொழிலாளர்கள் மற்றும் நோய்பரவும் ஆபத்துள்ள தரப்பினருக்குள் தொழிற்சாலைகள் மற்றும் பணியிடங்களில் பணிபுரிவோர், சுகாதார துறை சாராத முன்னிலை ஊழியர்கள் அடங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொவிட்- 19 தடுப்பூசியின் இரண்டாவதை பெற்றுக்கொண்டு ஆகக்குறைந்தது மூன்று மாத இடைவெளியின் பின்னர் இத் தடுப்பூசியினை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் கொவிட்-19 தடுப்பூசி இரண்டினைப் பெற்றுக்கொண்டவர்களில் கொவிட்-19 தொற்றிற்கு உள்ளானவர்கள் அவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்ட நாளிலிருந்து 06 மாத கால,இடைவெளியின் பின்னர் இத் தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளலாமெனவும் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். இந் தடுப்பூசிகள் வழங்கப்படும் நிலையங்கள் தொடர்பாக அந்தந்த பிரதேசங்களிற்குரிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மூலம் மக்களிற்கு அறிவிக்கப்படவுள்ளது.

இதேவேளை வேறுமருந்துகளிற்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் பிரதி சனிக்கிழமைகளில் தடுப்பூசி வழங்குவதற்கு யாழ்.மாவட்டத்தில் யாழ் போதனா வைத்தியசாலை மற்றும் பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைகளிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட பொது வைத்தியசாலைகளிலும் இத்தடுப்பூசிகள் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

30 வயதிற்கு மேற்பட்டவர்களில் அவ்வாறான நிலைமைகள் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள் தடுப்பூசி வழங்கும் நிலையத்தில் உள்ள வைத்திய அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு மேற்குறிப்பிட்ட வைத்திய சாலைகள் ஏதாவது ஒன்றில் தமக்குரிய மூன்றாவது தடுப்பூசியினை பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள முடியுமெனவும் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

# கடற்படை பஸ்-வான் மோதுண்டதில் வான் சாரதி பலி;14 பேர் படுகாயம்

அநுராதபுரம்-புத்தளம் பிரதான வீதியின் மஹபுளங்குளம பகுதியில் வான் ஒன்றும் கடற்படைக்கு சொந்தமான பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதுண்டதில் வானின் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் வானில் பயணித்த ஆறுபேர் மற்றும் கடற்படையினர் எட்டு பேர் படுகாயமடைந்த நிலையில் அநுராதபுரம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக எலயாபத்துவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் வெள்ளிக்கிழமை அதிகாலை 5.10 மணியளவில் மஹபுளங்குளம பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர்.சம்பவத்தில் காயமடைந்த கடற்படை பஸ்சில் பயணித்த எட்டுபேரும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

நொச்சியாகம பகுதியை வசிப்பிடமாக கொண்ட 23 வயதுடைய வான் சாரதியே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

மதவாச்சி-பூனாவ கடற்படை முகாமிலிருந்து புத்தளம் கற்பிட்டி கடற்படை முகாமிற்கு கடற்படை வீரர்களை ஏற்றிச் சென்ற கடற்படை பஸ்சும் நொச்சியாகம பகுதியிலிருந்து அநுராதபுரம் பகுதிக்கு பயணித்துக் கொண்டிருந்த வானும் நேருக்கு நேர் மோதுண்டதிலேயே இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் எலயாபத்துவ பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழ்-முஸ்லிம் இனங்கள் இலங்கையில் ஒருமைப்பாட்டுடன் செயற்பட வேண்டும்

## - இந்தியன் முஸ்லிம் லீக்-



தமிழ் நாட்டில் முஸ்லிம்களும் தமிழர்களே என்ற நிலையே தொடர்வது போன்று இலங்கையிலும் இரு இனங்களும் ஒருமைப்பாட்டுடன் செயற்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பென இந்தியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் காதர் மொஹிடீன் தெரிவித்தார். மேலும் இந்நிலையையே தாம் வரவேற்பதாகவும் குறிப்பிட்டார். இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியன் முஸ்லிம் லீக்கின் தேசிய தலைவர் காதர் மொஹிடீனுக்கு கடந்த புதன்கிழமை தமிழ் மற்றும் முஸ்ஸிம் அரசியல் தலைவர்களுடனான கலந்தரையாடலின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம்,தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,மேல் மாகாண சபை உறுப்பினரும் தமிழ்-முஸ்லீம் தேசிய கூட்டமைப்பின் இணை தலைவருமான கலாநிதி குமரகுருபரன் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்;போது தி.மு.க. கூட்டணியின் பங்காளிகள் எனும் வகையில் தமிழக அரசு தனது வரவு-செலவுத் திட்டத்தில் தமிழக அகதி முகாம்களில் வாழும் எமது அகதிகளுக்கு வீடு ,கல்வி பல்கலைக்கழக அனுமதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளை அறிவித்திருப்பதற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.இவ்வாறான நிலையில் இதனை தான் நிச்சயம் தமிழக முதல்வர் ஸ்டாலினுடன் பகிர்ந்து கொள்வேனென காதர் மொஹிதீன் குறிப்பிட்டதுடன் ஒரு சில தனி நபரின் கோரத்தனமான நடவடிக்கை காரணமாக முஸ்லிம் அடிப்படைவாதமென அடையாளப்படுத்துதல் கவலைக்குரியதெனவும் தெரிவித்தார்.அத்துடன் முஸ்லிம்களும் தமிழர்களே அந்த ஒருமைப்பாட்டை ஏற்படுத்த முயல்வது வரவேற்கப்பட வேண்டிய விடயமென குறிப்பிட்ட அவர் இது காலத்தின் தேவையெனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த சந்திப்பில் இலங்கை-இந்திய அரசியல் தொடர்பாளர் மணவை அசோகனும் முஸ்லிம் லீக் தலைவருடனிருந்தார்.

# பிரச்சினைகளுக்கு தீர்வு காண புதிய ஐக்கிய முன்னணி அவசியம்

## -முன்னாள் ஜனாதிபதி மைத்திரி-



நாட்டில் நிலவுகின்ற முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வு காணுவதற்கு புதிய ஐக்கிய முன்னணியொன்று உருவாக்கப்பட வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். விரலை நீட்டி யாரையும் குற்றம் சாட்டுவதற்குப் பதிலாக இதனை உருவாக்க வேண்டுமென்றும் இதற்கு ஊழலற்ற நாட்டை நேசிக்கும் அரசியல்வாதிகள் மற்றும் ஏனையோர் ஒன்றிணைய வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நாட்டின் எதிர்காலத்திற்காக இவ்வாறானதொரு சக்தி உருவாக வேண்டிய தருணம் வந்துள்ளதாகவும் குறிப்பிட்ட அவர் சுதந்திர கட்சியில் பாரிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இன்னும் 6 மாதங்களில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மீண்டும் ஒரு வலுவான அரசியல் சக்தியாக மாறும் என தான் நம்புவதாகவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# எண்ணெய் இறக்குமதியை ரூபாவில் செலுத்துவதற்கு ஆராயப்படுகின்றது

## -அமைச்சர் உதய கம்மன்பில-

மசகு எண்ணெயை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கத்திற்கு தேவையான டொலர் கையிருப்பு இல்லாமை பாரிய பிரச்சினையாக இருப்பதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இதற்கான தீர்வாக ரூபாவில் பணம் செலுத்தி மசகு எண்ணெய் இறக்குமதி செய்யும் முறையை நோக்கிச் செல்வதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். 26 நாட்களாக மூடப்பட்டிருந்த சப்புஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்கும் நிகழ்வில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். தற்போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் மேலும் 25 நாட்களுக்கு தேவையான எண்ணெய் கையிருப்பு உள்ளது. இதேவேளை, நாணய ஒதுக்கம் தொடர்பில் மத்திய வங்கி நேற்று வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில், ஜனவரி மாதத்திற்குள் நாட்டின் உத்தியோகபூர்வ அமெரிக்க டொலர் ஒதுக்கம் ஒரு பில்லியனாக வீழ்ச்சியடையும் என தெரிவித்துள்ளது. அதன்படி, ஜனவரி மாதத்திற்குப் பிறகு அத்தியாவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதில் நாடு பாரிய சிக்கலை எதிர்கொள்ள நேரிடும் என பொருளியல் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்பிளிகேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்
இலக்கம் : 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பக்ஸ்:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
சனிக்கிழமை 11 டிசம்பர் Saturday 11 December 2021

## போராளிகளைக் கொண்டாடாத சமூகம் போராட்டத்தைக் கொண்டாட முடியாது

இலங்கையில் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்து 12 ஆண்டுகள் கடந்துள்ளபோதும் வாழ்வாதாரத்துக்கான மற்றும் இயல்பு வாழ்வுக்குத் திரும்புவதற்கான முன்னாள் போராளிகளின் போராட்டம் இன்னமும் ஓயவில்லை.

உயிர் வாழ அவர்கள் அன்றாடம் கடும் போராட்டங்களைச் சந்திக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

ஆயுதப் போராட்டத்தில் இறுதிக் கட்டத்தில் சரணடைந்த முன்னாள் போராளிகள் சுமார் 12,000 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்தில் இணைக்கப்பட்டபோதும் அவர்களின் வாழ்வாதாரச் சிக்கல்களுக்குத் தீர்வற்ற நிலையே தொடர்கிறது.

முன்னாள் போராளிகள் வீதிகளில் கையேந்தி யாசகம் பெறும் நிலை காணப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. செல்வம் அடைக்கலநாதன் கடந்த சில நாட்களுக்கு முன்னர் பாராளுமன்றில் சுட்டிக்காட்டினார்.

தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு அரசாங்கம் வாக்குறுதியளித்திருந்தது. சிறு கைத்தொழில் முயற்சிகளுக்கு வங்கிக்கடன்கள் மூலம் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக்கொடுப்பதாக அரசு கூறியிருந்தது. ஆனால் எதுவும் நடைபெறவில்லை. இதனால் முன்னாள் போராளிகள் வறுமை காரணமாக தற்கொலை முயற்சிகளில் ஈடுபடும் அளவுக்கு நிலைமை உள்ளது. பலர் தற்கொலையும் செய்துள்ளனர் எனவும் அவா் தெரிவித்தார்.

தமிழர்களைப் பொறுத்தவரை இந்தச் செய்தி வெட்கக்கேடானது. தமிழ் சமூகத்தின் மீதான அடக்குமுறைகளுக்கு எதிராக கிளர்ந்தெழுந்து. அந்த இனத்தின் விடுதலைக்காக ஆயுதமேந்தி தங்களது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிந்தவர்கள் தங்கள் வாழ்க்கைக்காக அன்றாடம் போராடுவது என்பது அந்த சமூகத்துக்கே தலைகுனிவை ஏற்படுத்தும்.

போராளிகளைக் கொண்டாடாத ஒரு சமூகம் போராட்டத்தைக் கொண்டாட முடியாது. இன்றைக்கு போராட்டத்தைக் கொண்டாடும் பலர் போராளிகளை கண்டுகொள்ளாதிருப்பது என்பது முரண்நகையாக உள்ளது.

விடுதலைக்கான போராட்டத்தில் பங்கேற்று தங்கள் உயிர்களைத் தியாகம் செய்தவர்கள் இன்று எந்தளவுக்கு போற்றப்படுகிறார்களோ, அவர்களின் தியாகங்கள் எந்தளவுக்கு மதிக்கப்படுகிறதோ அந்தளவுக்கு மதிக்கப்பட வேண்டியவர்களாக முன்னாள் போராளிகள் உள்ளனர்.

ஆனால் அவர்களை அரசாங்கம் மட்டுமல்ல தமிழ் சமூகமும் பெரியளவில் கண்டுகொள்ளவில்லை என்பதுதான் கசப்புக்குரிய யதார்த்தம். இது கசப்புக்குரியதாயினும் வெளிப்படுத்தப்பட வேண்டிய உண்மை.

முன்னாள் போராளிகளில் பலர் உடல், உளவிய ரீதியாக கடுமையாக பாதிப்புக்களை எதிர்கொண்டவர்களாக உள்ளனர்.

போர், போரின் பின்னர் அவர்கள் கையாளப்பட்ட பொறிமுறை, சமூகத்தில் இணைக்கப்பட்ட பின்னர் அவர்கள் கையாளப்படும் பொறிமுறை என்பன அவர்கள் மத்தியில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

இவையும் அவர்கள் சாதாரண வாழக்கைக்குத் திரும்புவதற்கான தடைகளாக உள்ளன.

இதிலும் குறிப்பாக போரில் காயமடைந்த நிரந்தரமாக ஊனமுற்றவர்களின் நிலை மிகவும் மோசமானது.

இவ்வாறானவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சில பொறிமுறைகள் ஊடாக பராமரிக்கப்படுகிறார்கள். அதற்கான பொறிமுறைகளை ஏற்படுத்தியவர்கள் நிச்சயமாக பாராட்டிக் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள்.

எனினும் பெரும்பாலான முன்னாள் போராளிகளின் சமூக, பொருளாதார, வாழ்வியல் நிலை என்பது இன்னமும் கவலைக்குரியதாகவே உள்ளது.

போரியல் சார்ந்து இயங்கிய அவர்கள் பலார் பிற தொழில் துறைகளில் தங்களை நிலைநிறுத்துவது கடினமாகவுள்ளது. அத்துடன், தொழில்துறைகளில் அவர்களால் ஈடுகொடுக்க முடியாதுள்ளது.

எனவே, முன்னாள் போராளிகளின் நிலைகள் ஆராயப்பட்டு அவர்களுக்கான நிரந்தர வாழ்வாதாரத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

முன்னாள் போராளிகளுக்கான உதவித் திட்டங்கள் வழங்கப்படவில்லை என முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் அவை முறைப்படுத்தப்படவில்லை. நாளாந்த உதவிகளை அவர்களை கையேந்தும் நிலைக்கே இட்டுச் செல்லும். அதனை விடுத்து அவர்கள் நிரந்தர வருமானமீட்டுபவர்களாக உருவாக்கப்பட வேண்டும்.

ஆனால் துரதிஷ்டம் இவ்வாறான நீண்டகாலக் கொள்கைத் திட்டங்கள் பாரியளவில் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்படவில்லை.

இதன் விளைவே முன்னாள் போராளிகள் கையேந்தி யாசகம் பெறுகின்ற நிலையில் உள்ளனர் என்பது குறித்து இன்றும் நாம் பாராளுமன்றத்திலும் வெளியிலும் பேசிக்கொண்டிருக்க வேண்டியுள்ளது. இது ஒட்டுமொத்த தமிழ் சமூகத்துக்கும் வெட்கக்கேடானது.

இந்நிலையில் இன்னும் இந்த அவப்பெயரை தவிர்த்து முன்னாா் போராளிகளின் வாழ்வாதரத்தை உறுதி செய்ய பிறரை நம்பியிராது தமிழ் சமூகமே முன்வர வேண்டும். உள்நாட்டிலும் புலம்பெயர் தேசங்களிலும் உள்ள தமிழ் மக்களால் இது முடியும். இதற்கான சட்ட ரீதியில் முறையான பொறிமுறை ஒன்று இனியேனும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இனியும் முன்னாள் போராளிகள் கையேந்தும் நிலை இருக்கக் கூடாது. போராளிகளைக் கொண்டாடாத ஒரு சமூகம் போராட்டத்தைக் கொண்டாடுவது அர்த்தமற்றதாகவே அமையும்.

# மறைந்தும், மங்காத புகழுடன் நூற்றாண்டு காணும் பரமேஸ்வராக் கல்லூரி



இலங்கையில் உயர் கல்வி வரலாற்றில் கற்றோரை நிமிர்ந்து பார்க்க வைத்த பெருமைக்குரியது சேர்.பொன்.இராமநாதனின் சிந்தனையிலுதித்த பரமேஸ்வராக் கல்லூரி.

இன்று இருந்திருந்தால் நூறாண்டு கொண்டாட வேண்டிய உயர் கலைக்கூடம் இராமநாதனின் கனவுகளில் ஒன்றான யாழ். இந்துப் பல்கலைக் கழகம் என்ற உயர் கல்விக் கூடத்துக்குள் மறைந்து போனாலும் தமிழ் மக்களால் மறக்கப்படமுடியாத பொக்கிஷமாகவே மனதில் சுமக்கின்றனர்.

2021 நூற்றாண்டு காண வேண்டிய இப்பாடசாலையின் வரலாற்றை இன்றைய சந்ததியினர் மத்தியில் மீளளிக்கவேண்டியது காலத்தின் கட்டாயம்.

யாழ்ப்பாணம்-திருநெல்வேலியில் சுமார் இருபத்தைந்து (25) ஏக்கர் விஸ்தீரணமான நிலப்பரப்பிலே ஆண்பாலாருக்கான பாடசாலையாக பரமேஸ்வரா வித்தியாசாலை சேர்.பொன். இராமநாதனால் ஆரம்பிக்கப்பட்டது.

கல்வியறிவினையும் பண்பாட்டினையும் ஊட்டும் அருங்கலைக் கூடமாகவும் சைவநெறி மரபினையும் தமிழ்ப் பண்பாட்டினையும் பேணிக்காக்கும் அரணாக அமையும் வகையில் சைவப்பெருவள்ளல் சேர். பொன். இராமநாதன் 22.08.1921 இல் பரமேஸ்வரா கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையின் கல்வி அபிவிருத்தி தொடர்பில் சேர். பொன். இராமநாதன் ஆற்றிய பணிகள் மதிப்பிடுதலுக்கு அப்பாற்பட்டவை. தீர்க்கதரிசனமாக அவர் ஏற்படுத்திய கல்விசார் வளங்களே தமிழர் தம் உயர்கல்வி மையமாக இன்று உயர்ந்து நிற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

எனினும், இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் மௌனமாகப் புதையுண்டு கிடக்கும் பரமேஸ்வராக் கல்லூரியை நினைவு கூர்வதற்கும், அக் கல்லூரி தமிழுக்கும், சைவத்திற்கும் கல்வி வளர்ச்சிக்கும் ஆற்றிய பணியைப் பற்றிப் இன்றைய சந்ததியினர் அறிந்து கொண்டாடவும், ஊக்கம் பெறவும் வாய்ப்பற்றுப் போய் விட்டது.

பரமேஸ்வராவில் 1947 இல் கல்வி கற்ற பழைய மாணவி என்ற புழகாங்கிதத்தோடு இப்பாடசாலை பற்றி நூல்களினூடாக நானறிந்தவற்றை பரமேஸ்வராவின் நூற்றாண்டு நினைவாக இங்கு பகிர்ந்து கொள்கிறேன். இது கற்றோரும், உற்றோரும் இக் கல்லூரியை மீள நினைந்து இன்புறத் தூண்டும்.

பரமேஸ்வராக் கல்லூரியானது அழகானதும் உறுதியானதும் போதிய நீள அகலம் கொண்ட விசாலமான மாடிக்கட்டடத் தொகுதியை உள்ளடக்கிய ஒரு பௌதிகக் கட்டமைப்பாகும்.

மேல் மாடிக்குச் செல்வதற்கான படிகள் மற்றும் மேல் மாடித்தளம் அத்துடன் மேல் மாடியில் அமைந்த பரந்த மேடை என்பன பர்மா தேசத்திலிருந்து கொண்டு வரப்பட்ட தேக்கம் மரத்தினால் முற்றிலும் உருவாக்கப்பட்டவை.

பரமேஸ்வரர் ஆலயக் கட்டட வேலைகள் பூர்த்தியாகும் வரை தற்போதைய இராமநாதன் மண்டபம் பிரார்த்தனைக்குரிய இடமாக அப்போது இருந்துள்ளது. இராமநாதனால் இம் மண்டபத்தில் அமைக்கப்பட்ட அந்த மேடை தற்போது இல்லை. மேடை அகற்றப்பட்டு அந்த இடத்தில் யாழ். பல்கலைக் கழகப் பரீட்சைகள் கிளையின் அலுவலகம் தற்போது அமைக்கப்பட்டுள்ளது.

இப் பாடசாலை காற்றோட்ட வசதியுள்ள அகன்ற வகுப்பறைகள், விசாலமான மண்டபம், பரந்த விளையாட்டு மைதானம், சிவாலயம், நூலகம், எனச் சகல வசதிகளோடும் இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்டமை பெருமைக்குரியது.

ஒழுக்கமற்றவர்கள் கற்ற கல்வி பயனற்றது. என்பதை அன்றே உணர்ந்த சேர். பொன். இராமநாதன் ஆன்மீக அறிவுத்துறையில் உத்தமமான மாந்தர்களை உருவாக்க வேண்டும் என்பதை உயரிய நோக்கமாகக் கொண்டு உருவாகியதே பரமேஸ்வராக் கல்லூரி.

இதற்கேற்ற பொறிமுறையாக இக் கல்லூரியில் குருகுலக் கல்வி முறையை மாணவர்கள் வரன்முறையாக பெற்றுக்கொள்ளும் சூழமைவு உருவாக்கப்பட்டு மாணவர்களும் ஆசிரியர்களும் உடனுறைந்து கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடக் கூடியவாறு விடுதிச் சாலை மண்ணால் அமைக்கப்பட்டு அதன் தரை பசுவின் சாணத்தினால் மெழுகி கிடுகினால் கூரையினை வேய்ந்து ஒரு பாரம்பரியமான கற்றல் சூழலுடைய தன்மையுடன் காணப்பட்டிருக்கின்றது.

இவ் விடுதியின் காப்பாளராக அப்போது தலைமை ஆசிரியராக விளங்கிய சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் தொழிற்பட்டார்.

மாணாக்கர் ஆசாரசீலராகத் தூய உடையணிந்து திருநீறு பூசிச் சந்தனப் பொட்டிட்டுப் பாடசாலைக்கு வருதல் வேண்டும். காலை மாலை வேளைகளில் வழிபாட்டிற்கென அமைந்த இடத்தில் மாணவர்கள் தினமும் பரமேஸ்வரனை வழிபட வேண்டும் என்பன இக் கல்லூரியின் வழமையான நடைமுறையாகும்.

இதன் படி பண்டிதர் மாணிக்கதியாகராஜரை (1877) அழைத்து வந்து தினந்தோறும் காலையில் சைவ நற்சிந்தனைப் பேச்சுக்களை நிகழ்த்துவித்துள்ளார். இதற்காக இராமநாதனவர்கள் தாமே நேரடியாகப் பண்டிதரிடம் சென்று அவரை தமது வாகனத்தில் அழைத்து வந்துள்ளார். பிரசங்கம் முடிந்த பின்னர் பண்டிதரை அவரது இல்லத்திற்கு தானே கொண்டு போய்ச் சேர்ப்பித்துள்ளார். இது பல காலம் நடந்துள்ளது என்ற வண்ணைச் சிலேடை வெண்பா நூல் (1989) தரும் செய்தி பரமேஸ்வராவின் கல்வி முறையில் ஆன்மீகத்தைச் செறிய வைத்த சேர்.பொன். இராமநாதனின் முயற்சிக்கு எடுத்துக் காட்டாகும்.

பரமேஸ்வராவின் ஆன்மீகக் கொள்கை அதன் மகுட வாசகமான 'திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய் என்பதன் மூலம் நன்கு புலப்படுகின்றது.

இக்கல்லூரியின் முதலாவது அதிபராகச் சேர். அருணாசலத்தின் மகனார் மகாதேவா நியமிக்கப்பட்டிருந்தார்.

வழிபாட்டுடன் வித்தியாரம்பம் செய்யும் நோக்கில் சோமாஸ்கந்த மூர்த்தியை எழுந்தருளச் செய்து பூசை வழிபாடுகளின் பின்னர் கல்லூரிக்கான கட்டட வேலைகள் 1920 களில் ஆரம்பிக்கப்பட்டன. இன்றும் கூட யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முக்கிய நிகழ்வுகள் பலவும் பரமேஸ்வரர் ஆலயத்தில் ஆரம்பிக்கப்படுவது வழமையானது. இது பரமேஸ்வராக் கல்லூரிப் பாரம்பரியத்தின் நீட்சி என்றே கருதத் தோன்றுகிறது.

சேர்.பொன்.இராமநாதன் கொழும்பில் வசித்த போதும் பரமேஸ்வராக் கல்லூரியின் கட்டட வேலை மேற்பார்வை, கணக்குப் பரிசோதனை மற்றும் திருத்தப் பணிகள் முதலானவற்றின் பொருட்டு அவ்வப்போது நேரடியாகக் கல்லூரிக்குப் பிரசன்னமாகியுள்ளார். என ஈழகேசரி ஆண்டு மடல் கட்டுரையொன்றின் மூலம் அறிய முடிகின்றது.

இதன்படி கொழும்பிலிருந்து புகைவண்டியில் வரும் இவர், தற்போது பரமேஸ்வராச் சந்தியையும் கே.கே.எஸ் வீதியிலுள்ள நாச்சிமார் கோயிலையும்




இணைக்கும் இராமநாதன் வீதியை ஊடறுக்கும் புகையிரதக் கடவையை அண்டிய பகுதியில் புகையிரதத்தை நிறுத்தி அதிலிருந்து இறங்கி நேரடியாகப் பாடசாலைக்கு வந்து சென்றுள்ளார் என அறிய முடிகின்றது.

இவ்வாறு புகையிரதத்திலிருந்து இறங்கும் போது அதற்குரிய வசதியாக தற்காலிக படிகளும் பொருத்தப்பட்டதாக அறியப்படுகிறது. யாழ்ப்பாணத்திற்குப் புகையிரத சேவையை ஏற்படுத்திக் கொடுத்த பெருமகனாருக்கு இத்தகைய ஒரு மரியாதை வழங்கப்பட்டிருந்தமை சாலவும் பொருத்தமானதே.

பரமேஸ்வரன் ஆலயக் கட்டடப் பணிக்கான கருங்கற்கள்



வியாங்கொடையிலிருந்து புகை வண்டியில் கொண்டு வரப்பட்டு இப்பகுதியில் இறக்கப்பட்டுப் பின்னர் கட்டடப் பணிக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. என மூதறிஞர் க.சி. குலரத்தினத்தின் கையெழுத்துப் பிரதிகள் வாயிலாக அறிய முடிகின்றது.

முப்பதிற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பரமேஸ்வராவில் அப்போது கற்பித்துள்ளனர். இந்தியாவிலிருந்து வந்த ஆன்மீக வாதிகளும் மற்றும் ஆங்கிலேயர்களும் கூட அதிபர்களாகவும் ஆசிரியர்களாகவும் இங்கு பணியாற்றியுள்ளனர். சேர். பொன்.இராமநாதன் காலத்தில் இப் பாடசாலையில் கற்றல் கற்பித்தல் பணிகள் உன்னத நிலையில் இருந்துள்ளமை பற்றி 1937 ஆண்டின் ஈழகேசரி பத்திரிகையில் குறிப்புக்கள் உள்ளன.

இக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வி மாணவர்களுக்கான வகுப்புக்கள் நடைபெற்றுள்ளன. 18.01.0922ஆம் திகதியிலிருந்து இலண்டன் மற்றிக் வகுப்புக்களும் மற்றும் விஞ்ஞான



கலாநிதி (திருமதி) மைதிலி விசாகரூபன்
சிரேஷ்ட உதவி நூலகர் - தரம்-1
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இடைநிலைப் பரீட்சை வகுப்புக்களும் ஆரம்பித்து நடத்தப்பட்டன. என்பதை 05.01.1922 இல் வெளியாகிய இந்து ஒகன் பத்திரிகை குறிப்பிடுகின்றது.

1924 இல் பரமேஸ்வராக் கல்லூரி இலண்டன் பல்கலைக் கழக பட்டப் பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார் செய்யும் கல்லூரியாகவும் செயற்பட்டுள்ளது. 1952 களில் இக் கல்லூரியில் கிறிஸ்தவ, பௌத்த மாணவரும் கல்வி கற்றுள்ளனர். எனவும் இந்து ஓகன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. மதுரை பண்டிதர் பரீட்சை வகுப்புக்களுக்கான தயார்ப்படுத்தல்களும் இப்பாடசாலையில் இடம் பெற்றுள்ளது. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியாகி இயங்கியுள்ளது. இவ்வாறு அக்காலப்பகுதியில் கல்விப் பணியின் உச்சத்தைத் தொட்ட இக்கல்லரி 1925 பங்குனி 06 மற்றும் 13 ஆம் திகதிகளில் வெளியாகிய அரசாங்க வர்த்தமானிப்படி இலங்கையின் கல்விக்கும் பொறுப்பான நிறுவனமாக இலங்கை அரசால் அங்கீகாரம் பெற்ற செய்தி பதிவாகியது.

26.11.1930 இல் சேர். பொன். இராமநாதனின் மறைவையடுத்து ஆர்.எல்.ஹரிசன் என்னும் இயற்பெயருடைய லேடி லீலாவதி இராமநாதன் அம்மையார் இப் பாடசாலையின் சகல பொறுப்பையும் தாமே ஏற்றுக் கல்லூரியை வழிநடத்தினார்.

1953 இல் லேடி இராமநாதனின் மறைவுக்குப் பின்னர் சேர். பொன் இராமநாதவள்ளலின் மகளாகிய சிவகாமசுந்தரியும் அவரது கணவராகிய சு.நடேசபிள்ளையும் இக் கல்லூரியின் நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்தினர். இவர்கள் இராமநாதர் தொடங்கிய பணியைக் காத்து வந்தனர்..

1974.10.06 பரமேஸ்வராக் கல்லூரியைக் கேந்திர நிலையமாகக் கொண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகம் இந்துப் பண்பாடு மற்றும் தமிழ்க் கற்கைகளின் மத்திய நிலையமாக உயர்த்தும் இராமநாதரின் நோக்கை உள்வாங்கி ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையின் முன்னாள் பிரதமர் அமரர் சிறிமாவோ பண்டாரநாயக்கா நேரில் வருகை தந்து பரமேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடு நிகழ்த்தி யாழ். வளாகத்தை ஆரம்பித்து வைத்தார்.

பின்னர் 1979 இல் இவ் வளாகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்பட்டது. இந்நிலையில் பரமேஸ்வராக் கல்லூரியின் எச்சசொச்சங்கள் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலைக்கு மாற்றப்பட்டன.பரமேஸ்வராக் கல்லூரி மறைந்தாலும் அதனைக் கேந்திர நிலையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உள்ளவரை பரமேஸ்வரா கல்லூரியும் மங்காப் புகழ் பெறும்.

இப் பல்கலைக்கழகம் சிறப்பிக்கப்படும் போதெல்லாம் பரமேஸ்வராவும் சிறப்பிக்கப்படும். நூற்றாண்டைக் கடந்தும் மங்காப் புகழோடு சேர்.பொன். இராமநாதவள்ளலின் இப்பணி போற்றப்பட்டுக் கொண்டேயிருக்கும். சைவ மரபினையும் தமிழ்ப் பண்பாட்டையும் நோக்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் சேர்.பொன். இராமநாத வள்ளலுக்கு இப் பல்கலைக்கழகம் செய்யும் அஞ்சலியாகச் சென்று சேரும்.

# மனித உரிமை தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி

சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு பெண்கள் வாழ்வுரிமை சங்கத்தினர் நேற்று கிளிநொச்சியில் விழிப்புணர்வு பேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.

கிளிநொச்சி ஏ9 வீதியில் ஆரம்பித்து பெண்கள் வாழ்வுரிமை சங்க கட்டத்தில் முடிவடைந்தது இதன்போது எல்லா மனிதர்களும் சுதந்திரமாகவும் கண்ணியத்திலும் உரிமைகளிலும் சமமாக பிறந்தவர்கள் எனும் தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்ட விழிப்புணர்வு பேரணியில் பெண் குலத்தை மதித்து பெண்ணியம் காத்திடு, வேண்டாம் வேண்டாம் பாலியல் துஷ்பிரயோகம் வேண்டாம், பெண்கள் மீதான வன்முறைகளை சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும், ஆண்-பெண் ஊதிய பாகுபாடு வேண்டாம் என்று சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்டவர்கள் பதாதைகளை ஏந்தியவாறு தங்களின் விழிப்புணர்வை மேற்கொண்டிருந்தார்கள்.

(52)

## 'நீரிழிவு நோயும் யோகாசனமும்' நூல் வெளியீட்டு விழா

வவுனியாத் தமிழ்ச் சங்கம் நடத்தும், வைத்திய கலாநிதி திருமதி சரஸ்வதி பிரபாகரனின் நீரிழிவு நோயும் யோகாசனமும் என்னும் மருத்துவ நூல் வெளியீட்டு விழா, நாளை வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறும்,இந் நூல் வெளியீட்டு விழாவில் சிறப்பு அதிதியாக வவுனியா பல்கலைக்கழகத் துணைவேந்தர் கலாநிதி த.மங்களேஸ்வரன் கலந்துகொள்கிறார். தலைமையுரையினைத் தொடர்ந்து நூலின் வெளியீட்டுரையினை மனவளக் கலைத் துணைப் பேராசிரியர் அருள்நிதி எஸ்.சந்திரன் வழங்குவார்.நூலின் முதற் பிரதியினை வவுனியா வெங்கடேஸ்வரா சுப்பர் மார்க்கற் உரிமையாளர் யு.இராஜேந்திரன் பெற்றுக்கொள்ள, தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கல் இடம் பெறும். நூலின் ஆய்வுரையினை கலாபூசணம்,தமிழ்மணி மேழிக்குமரனும் சிறப்புரையினை விழாவின் சிறப்பதிதியும் ஏற்புரையினை, நன்றியுரையினை நூலாசிரியரும் வழங்குவர்.

## மன்னாரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டம்

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு மன்னாரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டம் ஒன்றை நேற்றுக் காலை முன்னெடுத்திருந்தனர்.மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில், மன்னார் பேருந்து தரிப்பிடத்திற்கு முன் குறித்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தலைவி மனுவல் உதயச் சந்திரா தலைமையில் இடம்பெற்ற குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், அருட்தந்தையர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், மன்னார் நகர சபையின் தலைவர், உப தலைவர், உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட எம் உறவுகள் எங்கே, மனிதம் பாதுகாக்கப்படுகிறதா, அரசே காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகள் எங்கே, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நிரந்தர தீர்வை பெற்று தருவீர்களா ஆகிய பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு, போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாணவர், ஆசிரியருக்கு கொரோனாத் தொற்றுறுதி

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பெண்கள் பாடசாலை மாணவி ஒருவருக்கும் உடற்கல்வி ஆசிரியர் ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதையடுத்து 3ஆசிரியர்களும் இரு மாணவிகளும் உட்பட 7பேர் சுயதனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர். வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட கரவெட்டி கோட்டத்தில் இயங்கும் பெண்கள் பாடசாலையில் மாணவி ஒருவர் திடீரென மயங்கி விழுந்துள்ளார். அவருடன் தொடுகையை மேற்கொண்டு முதலுதவி வழங்கிய ஆசிரியர்கள் இருவரும், இரு மாணவிகளும் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

இதேபோல் கரவெட்டி கோட்டத்தில் இயங்கும் ஆண்கள் பாடசாலை உடற்கல்வி ஆசிரியர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்த இன்னுமொரு உடற்கல்வி ஆசிரியரும் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளனர். (21)

## அருளாசியுரையும், வேதபாராயண நிகழ்வும்

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி, இன்று 6.30 மணிக்கு மன்னார், மாந்தை மேற்கு, ஆத்திமோட்டை ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சு.தயாபரக்குருக்களின் அருளாசி உரையும், வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

## நல்லூரடியில் வெடித்து சிதறியது எரிவாயு அடுப்பு



நல்லூர் ,செல்வா வீதியில் உள்ள வீடு ஒன்றில் எரிவாயு அடுப்பு நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை வெடித்து சிதறியுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

ஏறாவூரில் பொலிஸ் உத்தியோகத்தராக கடமைபுரியும் மகன் நேற்றிரவு விடுமுறையில் வீட்டிற்கு வந்திருந்தார். இந்நிலையில் அவரது தாயார் அவருக்கு உணவு சமைத்துவிட்டு அடுப்பினை அணைத்துவிட்டு வெளியே வந்தார்.

இதன்போது சமையலறையில் பாரிய சத்தம் ஒன்று கேட்டது. அதனைத் தொடர்ந்து அங்கு சென்று பார்த்தபோது எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறி காணப்பட்டது. இருப்பினும் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை. (75)

## மாற்றுத்திறனாளிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணம் வழங்கிவைப்பு



வடக்கில் பொருளாதாரத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை கட்டி வளர்க்கும் நோக்கில் இயங்கிவரும் சிவா அன்னதான அறக்கட்டளையின் ஒழுங்கமைப்பில் லண்டனில் வசித்து வரும் செல்வி.ஹரினி.பரமானந்தனின் 17ஆவது பிறந்த தினத்தில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை மதிப்பளித்து மாற்றுத்திறனாளிகளின் பிள்ளைகள் 30 பேருக்கான கற்றல் உபகரணங்கள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டது. (15)

## முச்சக்கரவண்டி - மோட்டர் சைக்கிள் விபத்து: ஒருவர் காயம்



வவுனியா, பஜார் வீதியில் முச்சக்கரவண்டி - மோட்டர் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்துள்ளதாக வவுனியா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இவ் விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா நகரிலிருந்து பஜார் வீதியூடாக பயணித்துக்கொண்டிருந்த முச்சக்கரவண்டி வீதியில் திரும்ப முற்பட்ட போது, அதே பாதையில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் முச்சக்கரவண்டியுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளின் சாரதி காயங்களுக்குள்ளாகியுள்ளதுடன், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## வாழ்வாதார உதவிகளை சரியான முறையில் பயன்படுத்தி பயனடையுங்கள்

-கைதடி பெரும்பாக உத்தியோகத்தர் அறிவுரை-

விவசாயிகள் தமக்குக் கிடைக்கும் வாழ்வாதார உதவிகளை சரியான முறையில் பயன்படுத்தி அதன் மூலம் தமது வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும் என கைதடி கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் வி.வகீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை வேல்ட் விஷன் நிறுவனத்தின் அனுசரணையுடன் கமநல சேவை நிலையத்தில் இடம்பெற்ற பயனாளிகளுக்கு மின் மோட்டர் வழங்கும் நிகழ்வில் தலைமையுரை ஆற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்;

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக தகுதி அடிப்படையில் 27 விவசாயிகளைத் தெரிவு செய்து அவர்களுக்கு வேல்ட் விஷன் நிறுவன அனுசரணையுடன் நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. எமது சேவை நிலையத்திற்குள் 4000விவசாயிகள் உள்ள நிலையில் அதில் 27பேரைத் தெரிவு செய்வதென்பது பாரிய நெருக்கடியான செயற்பாடு. எனவே உதவித் திட்டம் கிடைக்கப்பெற்ற விவசாயிகள் அதனை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.கிடைக்கும் வாழ்வாதார உதவியை விற்பனை செய்தாலோ அல்லது தவறான விதத்தில் பயன்படுத்தினாலோ அது உதவித்திட்டம் கிடைக்காத விவசாயிகளுக்கு மன வருத்தத்தை ஏற்படுத்தும்.

கடந்த காலங்களில் வாழ்வாதாத உதவித்திட்டங்களை விற்ற சம்பவங்கள் சில இடம்பெற்றுள்ளன.நாம் உங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலேயே இவ்வாறான உதவித் திட்டங்களை ஏற்படுத்தித் தருகிறோம்.அதனை சரியாகப் பயன்படுத்தி வாழ்வாதார ரீதியாக உங்களை நீங்களே உயர்த்த வேண்டும்.என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.(13)

# வாழ்வாதார உதவி வழங்கி வைப்பு



சுண்டுக்குழி - ஈச்சமோட்டை ஜே/66 கிராம சேவையாளர் பிரிவில் 26 குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரண பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

பூமணி அம்மா அறக்கட்டளையின் ஸ்தாபக தலைவரும் சர்வதேச தமிழ் வானொலி பிரான்ஸ் (ITR) பணிப்பாளருமான சரவணையூர் விசுவாசம் செல்வராசாவின் நெறிப்படுத்தலில் மேற்குறித்த பகுதிகளில் வசிக்கும் குறைந்த வருமானங்களைக் கொண்ட வறிய நிலை 26 குடும்பங்களுக்கு பூமணி அம்மா அறக்கட்டளையின் வாழ்வாதார நிவாரண உதவிப் பணியாக அறக்கட்டளையினரால் பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

(50)

## வவுனியாவில் கோவிட் தடுப்பூசி செலுத்தும் பணி முன்னெடுப்பு

வவுனியா, தோணிக்கல் கிராம சேவையாளர் பிரிவில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசியாக பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

தோணிக்கல் கிராம அலுவலகர் காரியாலயத்தில் வைத்தியர் பிரசன்னா தலைமையில் நேற்றுக் காலை தொடக்கம் மதியம் வரை தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தது.

இதன்போது இரண்டாவது தடுப்பூசி செலுத்தி மூன்று மாதம் கடந்தவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசியாக பைஸர் தடுப்பூசி ஏற்றப்பட்டதுடன், இரண்டாவது மற்றும் முதலாவது தடுப்பூசி பெறாதவர்களுக்கு சினோபாம் தடுப்பூசியும் ஏற்றப்பட்டது.

தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையின் போது சுகாதார நடைமுறைகள் இறுக்கமாக பின்பற்றப்பட்டதுடன், 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி தொடர்பில் ஆலோசனைகளும் வழங்கப்பட்டிருந்தன.

## வவுனியா பொது வைத்தியசாலைக்கு வருவோருக்கான அறிவித்தல்

தற்பொழுது நாட்டில் நிலவும் கோவிட் தொற்று காரணமாக வைத்தியசாலை சமூகத்தினரினதும் நோயாளர்களினதும் நலன் கருதி நோயாளர்களை பார்வையிட வருவோர்களுக்கான எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் கலைநாதன் ராகுலன் தெரிவித்துள்ளார்.

தங்களது உறவினர்களோ அல்லது நண்பர்களோ தங்கியுள்ள விடுதியிலிருந்து வழங்கப்படுகின்ற நோயாளர் பார்வையிடும் அட்டையினைக் கொண்டு ஒரு நேரத்தில் ஒருவர் மட்டுமே உள் நுழைய முடியும்.

நோயாளர்களை காலை 6 மணி தொடக்கம் 7 மணி வரையும், மதியம் 12மணி தொடக்கம் 1 மணி வரையும், மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரையும் மாத்திரமே பார்வையிட அனுமதிக்க முடியும்.

ஏனைய நேரங்களில் நோயாளர்களை பார்வையிட வருவதையோ, நோயாளர் பார்வையிடும் அட்டை இன்றி வருகை தருவதையோ தவிர்த்துக் கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டு மக்களையும், வைத்தியசாலையில் தங்கியுள்ள நோயாளர்களையும் பாதுகாத்து அவர்களுக்கு ஆரோக்கியமான எதிர்காலத்தை வழங்கவேண்டிய பொறுப்புடன் வைத்தியசாலை சமூகம் செயற்பட்டு வருகின்றது.

எனவே தயவுசெய்து உங்களுக்காகவும் உங்கள் அன்புக்குரியவர்களுக்காகவும் தொடர்ந்தும் முகக் கவசங்கள் அணிந்து சமூக இடைவெளியை கடைப்பிடித்து தேவையற்ற விதத்தில் வெளியில் நடமாடுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள் எனவும் இதன்போது மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழரின் இதயபூமி தீவிரமாக சிங்கள மயப்படுத்தப்படுகிறது

-வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் தெரிவிப்பு-



தமிழர் தாயகத்தின் இதயபூமியான முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்கள குடியேற்றங்கள் ஆரம்பத்தில் மணலாறு பிரதேசத்தில் உருவாக்கப்பட்டு தனியான சிங்கள பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டதுடன் வெலிஓயா என பெயரும் மாற்றப்பட்டது.

யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்கள குடியேற்றங்களும் காணி அபகரிப்புக்களும் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன . மகாவலி எல் வலயத்தின் மூலம் கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, தென்னமரவடி, நாயாறு, போன்ற தமிழர்களின் பூர்வீகக் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன அத்துடன் வட்டுவாகல் நந்திக்கடல் ஆறுமத்தான் குடியிருப்பு போன்ற பகுதியில் கரையோர திணைக்களம் , வனஜீவராசிகள் திணைக்களமும் காணிகளை அபகரித்துள்ளன. அத்தோடு கோத்த கடற்படை முகாம் விரிவாக்கத்திற்கும் அபகரிக்க தீவிர முயற்சி மக்கள் எதிர்ப்பின் மத்தியில் தொடர்கிறது.

தற்போது மாந்தை கிழக்குப் பகுதியில் சிராட்டிக்குளம், நட்டாங்கண்டல், துணுக்காய், அமைதிபுரம் போன்ற பிரதேசங்களில் 23803 ஏக்கர் தமிழர்களின் பயிர்ச் செய்கை மற்றும் கால்நடை வளர்ப்புக்குரிய பூர்வீக காணிகள் வனவளத் திணைக்களத்தினால் அபகரிப்பதற்கான திட்டங்கள் தயார்ப்படுத்தப் பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தகாலப்பகுதியில் அபகரிக்கப்பட்ட காணிகளுக்கு மேலதிகமாக 2010 ஆண்டிற்கு பின் இன்றுவரை 56 ஆயிரம் ஏக்கருக்கு அதிகமான தமிழர்களின் பூர்வீக காணிகள் அபகரிக்கப்பட்டு தீவிரமாக சிங்கள மயப்படுத்தப்படு வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

(75)

# முல்லைத்தீவு பேருந்துசாலை பணத்தினை கையாடியவர் தொடர்பில் முறைப்பாடு

முல்லைத்தீவு அரச பேருந்து சாலைக்கு சொந்தமான பணத்தினை கையாடிய உத்தியோகத்தர் தொடர்பில் முல்லைத்தீவு பொலீஸ் நிலையத்தில் பிராந்திய பாதுகாப்பு முகாமையாளர்களால் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

கடந்த 09 ஆம் திகதி காலை 10 மணியளவில் வடபிராந்திய பாதுகாப்பு முகாமையாளரும் , பாதுகாப்பு உத்தியோகத்தரும் திடீரென இலங்கை போக்குவரத்து சபை முல்லைத்தீவு சாலைக்கு பரிசோதனைக்காக சென்றுள்ளார்கள். அப்பொழுது வங்கியில் வைப்பிலிட வேண்டிய சாலையினுடைய பணத்தினை பரிசோதனை செய்த போது அந்த பணத்தில் 8000 ரூபா குறைவாக இருப்பது தெரியவந்துள்ளது.

அந்த நாளில் கடமையில் இருந்த சாலை பரிசோதகரை கேட்டபோது அவர் முன்னுக்கு பின் முரணான தகவல் வழங்கியுள்ளதுடன் பின்னர் வெளியில் இருந்து அந்த பணத்தினை கொண்டுவந்து ஒப்படைத்துள்ளார்.

இது தொடர்பில் வடபிராந்திய பாதுகாப்பு முகாமையாளரால் முல்லைத்தீவு பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சாலை பரிசோதகர் கடமையில் இருக்கின்ற வேளைகளில் இவ்வாறான நிதி முறைகேட்டு சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக சாலை பணியாளர்கள் சிலர் தெரிவித்துள்ளார்கள்.

இது தொடர்பில் சாலை முகாமையாளரினை கேட்டபோது வடபிராந்திய பாதுகாப்பு முகாமையாளர்கள் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கை உண்மையானது அவர்கள்தான் இது தொடர்பான அறிக்கையினை தயாரித்து முல்லைத்தீவு சாலைக்கு அனுப்பவேண்டும் என தெரிவித்துள்ளார். (15)

## தற்காலிக வீடு அமைத்துக்கொடுப்பு



புதுக்குடியிருப்பு- மல்லிகைத்தீவு கிராமத்தில் இரண்டு பிள்ளைகளுடன் வசித்து வரும் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றிற்கு அவர்களின் குடும்ப நிலையினை கருத்தில் கொண்டு தற்காலிக வீடு ஒன்று புலம்பெயர் உறவு ஒருவரின் நிதிப்பங்களிப்பில் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது.

மல்லிகைத்தீவு கிராமத்தில் பெண்தலைமைத்துவ குடும்பம் ஒன்று இரண்டு பிள்ளைகளுடன் தற்காலிக கொட்டிலில் வசித்து வந்துள்ளார்கள்.

தற்போது ஏற்பட்டுள்ள பருவ மழைகாரணமாக வாழ்வதற்கு பல்வேறு சிரமங்களை முகம் கொடுத்துள்ளார்கள். இந்நிலையில் யாழ் குடத்தனை வடக்கு உதவும் உறவுகளின் ஒழுங்கமைப்பில் கனடாவில் வசித்துவரும் வேலுப்பிள்ளை யோகராசாவின் முழுமையான நிதிப்பங்களிப்பில் தற்காலிக இருப்பிடம் ஒன்று அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

இந்த தற்காலிக வீட்டுத்திட்டமானது புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தால் நிரந்தர வீட்டுத்திட்டம் எதிர்வரும் வருடம் வழங்கி வைக்க அனுமதிக்கப்பட்டதால் வீட்டுத்திட்டம் வழங்கி வைக்கும் வரை அக் குடும்பம் வசிக்க கூடியவாறு தற்காலிக இருப்பிடம் அமைத்து வழங்கி வைக்கப்பட்டது. (15)

## கலையகத் திறப்பு விழா

புதிதாக அமைக்கப்பட்ட நித்திலம் கலையகத் திறப்புவிழா,யாழ்.இசைக் கருவியையும் அதன் இசையையும் மீள் அறிமுகம் செய்யும் நிகழ்வு, நித்திலம் கலையகத்தின் முதலாவது திரைப்படமான தூவானம் திரைப்பட அறிமுக நிகழ்வு, தூவானம் திரைப்பட இசை வெளியீடு ஆகிய நிகழ்வுகள் நாளை பிற்பகல் 4 மணி முதல் 122/1, பலாலி வீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள நித்திலம் திரைப்படக் கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

தற்போதைய கொரோனாத் தொற்றுக் கட்டுப்பாடுகள் காரணமாக இந்த நிகழ்வுகளில் பொதுமக்களை நேரடியாக அழைக்காது "Nithilam Tv" You Tubeநேரலை ஊடாக அனைவரும் பார்வையிடக் கூடிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக நிகழ்வுகளின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (18)

## மறுக்கப்பட்ட கருத்து சுதந்திரம் தொடர்பிலான செயலமர்வு



சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் கொவிட் - 19 காலத்தில் பெண்களின் மறுக்கப்பட்ட கருத்து சுதந்திரம் தொடர்பிலான செயலமர்வு நேற்று இடம்பெற்றது.

விழுது நிறுவனத்தின் சிரேஷ்ட சமூக வலுவூட்டடாளர் வேந்தகுமார் ஜீவ சர்மிளா தலைமையில் திருநெல்வேலி லட்சுமி மண்டபத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் அதிதிகளாக சட்டமாணி கதிர்தர்சினி பரமேஸ்வரன்,யாழ் மாவட்ட பெண்கள் அபிவிருத்தி செயலக உத்தியோகத்தர் உதயனி நவரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டு கொவிட் காலத்தில் பெண்களின் மறுக்கப்பட்ட கருத்து சுதந்திரம் தொடர்பில் கருத்து பகிர்வுகளை மேற்கொண்டனர்.

இந் நிகழ்வில் பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

75

## வாள் வைத்திருந்த நபர் கைது



நீர்வேலியில் தம் வசம் வாள் வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டின் பெயரில் நபர் ஒருவர் நேற்று விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீர்வேலி மேற்கு நீர்வேலியைச் சேர்ந்த கணபதி சுதர்சன் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 03 வாள்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில் சந்தேக நபர் விசேட அதிரடிப்படையினரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(75)

## பெண் தலைமைத்துவ குடும்பத்திற்கு வாழ்வாதார உதவி வழங்கிவைப்பு

தாயகவிருட்சம் சுவிஸ் அறக்கட்டளையின் ஒழுங்கமைப்பில் திருமதி பத்மநாபசர்மா விமலாவின் பிறந்த நாளையொட்டி சுவிஸ் விநாயகர் மகளிர் அறக்கட்டளையின் ஒழுங்கமைப்பில் வாழ்வாதார உதவி வழங்கிவைக்கப்பட்டது.

அந்த வகையில் முல்லைத்தீவு மல்லாவி பிரதேசத்தின் அனிஞ்சியன்குளம் கிராமத்தில் பெண்தலைமைத்துவக் குடும்பம் ஒன்றிற்கான வாழ்வாதார உதவியாக நல்லின பசுமாடு ,கன்று வழங்கி வைக்கப்பட்டது.(15)

## ஆத்ம சாந்தி பிரார்த்தனை நிகழ்வு



எம்.ஜி.இராமச்சந்திரனின் தீவிர இரசிகனும் நண்பருமான யாழ். எம்.ஜி. ஆர் என அழைக்கப்படும் கோப்பாய் சுந்தரலிங்கத்தின் ஆத்மா சாந்தி பிரார்த்தனை நிகழ்வு நேற்று கோப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்றது.

இவ் நிகழ்வில் யாழ். சர்வமத தலைவர்கள் கலந்து கொண்டு கோப்பாய் சுந்தரலிங்கத்திற்கு ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்தனை நடாத்தினர்.

யாழ். கல்வியங்காடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள எம்.ஜி.ஆர் சிலை யாழ் எம்.ஜி.ஆர் கோப்பாய் சுந்தரலிங்கத்தின் சொந்த நிதியில் அமைக்கப்பட்டுள்ளதுடன் ஆண்டுதோறும் எம்.ஜி.ஆர் நினைவு தினங்களை அனுஸ்டித்து வந்ததுடன் அத்தினங்களில் வறிய மக்களுக்கு தன்னாலான உதவிகளையும் யாழ். எம்.ஜி.ஆர் செய்து வந்துள்ளார்.

யாழ்.எம்.ஜி.ஆர் என அழைக்கப்படும் கோப்பாய் சுந்தரலிங்கம் கடந்த மாதம் 11 ஆம் திகதி நோய்வாய்ப்பட்ட நிலையில் இயற்கை எய்தியமை குறிப்பிடத்தக்கது.-(40)

## கௌரவிப்பு நிகழ்வு



வட மாகாண ஆளுநரின் சமூகத்தொடர்புக்கான இணைப்பாளராக நியமிக்கப் பட்ட ஓய்வு பெற்ற சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் த. கணேசநாதனுக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் குப்பிளான் விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் த. கணேசநாதன் கலந்து கொண்டார். (53)

## கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்



சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு முன் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நடாத்தப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வலிந்து காணாமல் போனோருக்கு மரணச் சான்றிதழ் வேண்டாம், சர்வதேசமே நீதியைத் தா! உள்ளிட்ட பல கோஷங்களையும் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கலந்து கொண்டு ஆதரவு வழங்கியிருந்தார்.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் அலுவலகத்திற்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(18,40,75)

## முல்லைத்தீவிலும் கவனயீர்ப்பு போராட்டம்



சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் முல்லைத்தீவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுத்துள்ளார்கள்.

தொடர்ச்சியாக 1737 ஆவது நாளாக போராட்டம் மேற்கொண்டுவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று தமது உறவுகளின் உரிமைகளை வேண்டி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

காணாமல் போன தங்கள் உறவுகளுக்கு நீதிவேண்டியும் பல ஆண்டுகளாக போராடிவரும் மக்கள் உள்நாட்டில் தமக்கு எந்த தீர்வையும் தராது எனவும் சர்வதேசமே தமக்கான தீர்வை தர வேண்டும் எனவும் தமது உறவுகளின் உரிமைகளை உறுதிப்படுத்துமாறும் கோரி இக்கவனயீர்ப்பு போராட்டம் அமைந்திருந்தது. (15 )

## திடீர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலை வந்தவர் மரணம்

திடீர் சுகயீனம் காரணமாக நேற்று முன்தினம் பிற்பகல் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு அழைத்து வரப்பட்ட ஓய்வுநிலை உத்தியோகத்தர் ஒருவர் சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு பகுதியைச் சேர்ந்த ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தரான 71வயதான வ.நாகேஸ்வரன் என்பவரே இவ்வாறு வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டு சில நிமிடங்களில் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

-(13)

## இரத்ததான முகாம்

இணுவில் இளைஞர்களின் ஏற்பாட்டில் டாக்டர் ரகுபதி அறக்கட்டளையின் அனுசரணையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் முன்னாள் பொது வைத்திய நிபுணர் டாக்டர் அம்பலவாணர் ரகுபதியின் மூன்றாம் ஆண்டு நினைவாக மாபெரும் இரத்ததான முகாம் இன்று காலை-08.30 மணி முதல் இணுவில் அறிவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொண்டு உயிர் காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இதேவேளை, குருதிக் கொடையாளர்கள் 0774 431851 எனும் தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (18)

## ஹன்ரர் வாகனம் தலைகீழாக தடம் புரண்டு விபத்து




விசேட அதிரடிப்படையினரின் பிடியிலிருந்து தப்புவதற்காக தலைதெறிக்க ஓடிய ஹன்ரர் ரக வாகனம் தலைகீழாக தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

நேற்றுக் காலை வடமராட்சி, வல்லிபுரம் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

சட்டவிரோதமான முறையில் மண் ஏற்றிவந்த ஹன்டர் ரக வாகனத்தை விசேட அதிரடிப் படையினர் மறிக்க முற்பட்ட போது கன்டர் வாகனம் வேகமாக தப்பிச் செல்ல முற்பட்ட நிலையில் வல்லிபுரம் பகுதியில் தொலைத்தொடர்பு கம்பம் ஒன்றில் மோதியதுடன் தலைகீழாக புரண்டு நெல் வயலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

மண் கடத்தல்கரர்கள் தப்பிச் சென்றுள்ள நிலையில் இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதே வேளை குடத்தனைப் பகுதியில் சட்டவிரோதமாக மண் ஏற்றிவந்த டிரக்டர் ஒன்றும் விஷேட அதிரடிப்படையால் பிடிக்கப்பட்டு பருத்தித்துறை பொலிசில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.(44)

## கிளிநொச்சியிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரால் ஆர்ப்பாட்டம்




கிளிநொச்சியில் மனித உரிமை தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நீதி வேண்டி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்று கிளிநொச்சி, கந்தசுவாமி கோவில் முன்பாக ஆரம்பித்த நீதி வேண்டிய கவனயீர்ப்பு போராட்டம் டிப்போ சந்தி வரை முன்னெடுத்தார்கள்.

இதன் போது சர்வதேச மனித உரிமை ஆணையாளருக்கு மின்னஞ்சல் ஊடாக அனுப்பவுள்ள மகஜரும் ஊடகங்களிடம் கையளிக்கப்பட்டது. (52 )

# 1500 வைத்தியர்களுக்கு இன்னும் வைத்திய நியமனம் வழங்கவில்லை

## -அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்-

க.பிரசன்னா

உள்ளகப் பயிற்சியினை நிறைவு செய்துள்ள சுமார் 1500 வைத்தியர்களுக்கு இன்னும் வைத்திய நியமனம் வழங்கப்படவில்லை எனவும் சுகாதார அமைச்சின் வினைதிறனற்ற செயற்பாடுகள் காரணமாக வைத்தியர்களின் இடமாற்றம் மற்றும் நியமனம் என்பன தாமதமாவதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்தியக்குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

வைத்தியர்களின் இடமாற்றத்திலுள்ள தாமதம், இடமாற்ற பட்டியலை வெளியிடுதல், அமுல்படுத்துதலில் உள்ள தாமதம் மற்றும் சுகாதார அமைச்சின் வினைத்திறனற்ற செயற்பாடுகள் காரணமாக வைத்தியர்களின் இடமாற்றம் நியமனம் என்பன தாமதமாகின்றது. தற்போது 1500 வைத்தியர்கள் நிரந்தர நியமனத்துக்காக காத்திருக்கின்றனர். அவர்களுக்கான நியமனத்தை வழங்காது வேறு இடங்களில் அவர்களை பணிக்கமர்த்த சுகாதார அமைச்சு முயற்சிக்கின்றது.

இவர்களுடைய நியமனங்கள் தாமதப்படுத்தப்படுவதால் அவர்களுடைய பட்டப்படிப்புகள் மற்றும் தூர பிரதேசங்களுக்கான வைத்திய சேவைகள் என்பன தாமதமாகும் நிலை உருவாகியுள்ளது. தற்போது எம்.பி.பி.எஸ். கற்கைநெறியை நிறைவு செய்வதற்கு 28 வயதாவதுடன் பின்னர் உள்ளகப் பயிற்சியை நிறைவு செய்து வைத்தியராக பதிவு செய்வதற்கு 30 வயதாகின்றது. மேற்படிப்பை மேற்கொண்டு விசேட வைத்திய நிபுணராக நியமனம் பெறுவதற்கு 38 வயதுக்கும் மேல் செல்கின்றது.

இவ்வாறு தேவையற்ற ரீதியில் தாமதங்கள் நிகழ்வதால் நாட்டுக்கு வைத்தியர்களால் கிடைக்கப்பெறக்கூடிய சேவைக் காலம் குறைவடைகின்றது. எனவே சீரான சேவை கிடைக்க வேண்டுமாயின் வைத்தியரின் நியமனம் மற்றும் இடமாற்றம் என்பன உரிய முறையில் இடம்பெற வேண்டும். சுகாதாரத் துறையினை மேம்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே வைத்தியர்களின் நியமனமும் இடமாற்றமும் காணப்படுகின்றது. இதனை தொடர்ச்சியாக நாங்கள் சுகாதார அமைச்சிடம் வலியுறுத்தியுள்ளோம்.

நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் கடமைக்கு 148 வைத்தியர்கள் தேவைப்படும் நிலையில் 108 வைத்தியர்களே பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களில் 34 வைத்தியர்கள் இடமாற்றத்துக்காக காத்திருக்கின்றனர். எனவே வைத்திய நியமனம் மற்றும் இடமாற்றங்களை முறையாக மேற்கொள்ளாவிட்டால் பல்வேறு வைத்திய சாலைகளில் சேவை குறைபாடுகள் உருவாகும் வாய்ப்புள்ளதாகவும் இவற்றுக்கு உடனடியாக சுகாதார அமைச்சு தீர்வு வழங்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வீடு ஒன்றில் தாலிக்கோடி உட்பட தங்க நகைகளை கொள்ளையிட்ட பெண் கைது

## -மட்டு - தாளங்குடாவில் சம்பவம்-

மட்டு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள தாளங்குடா பிரதேசத்தில் வீடு ஒன்றில் பூசை செய்யச் சென்று அங்கிருந்த தாலிக்கொடி, தங்கச்சங்கிலி உட்பட சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான 7 கால் பவுண் தங்க நகைகளை கொள்ளையிட்டுச் சென்ற பெண் ஒருவரை வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர்.

இந்தப் பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றின் உரிமையாளர் தமது வீட்டை காவல் செய்வதற்கான சடங்கு பூசை ஒன்றை செய்வதற்காக சம்பவதினமான கடந்த 8 ஆம் திகதி புதன்கிழமை கொக்கட்டிச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணை வரவழைத்து இரவில் தங்கவைத்து பூசை நடவடிக்கை இடம்பெற்ற பின்னர் காலையில் அந்தப் பெண் அங்கிருந்து சென்றுள்ளார்.

இந்த நிலையில் வீட்டின் அலுமாரியில் கழற்றி வைத்திருந்த 6 பவுண் தாலிக்கொடி, ஒரு பவுண் தங்கச் சங்கிலி, கால் பவுண் கொண்ட மோதிரம் திருட்டுப் போயிருந்துள்ளது.

இதனையடுத்து காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸ் நிலைய பெருங்குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி சப்இன்பெக்டர் வை. விஜயராஜா தலைமையிலான பொலிசார் விசாரணையை மேற்கொண்ட நிலையில் கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த 31 வயதுடைய பெண்ணை கைது செய்ததுடன் அவர்திருடிச்சென்ற தங்க ஆபரணங்களை ஈடுவைத்து பினான்ஸ் கொம்பனி மற்றும் தங்க நகைகடைகளில் இருந்து கொள்ளையிட்ட தங்க ஆபரணங்களை மீட்டனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட பெண் அக்கரைப்பற்று, கொக்கட்டிச்சோலை, களுவாஞ்சிக்குடி பொலிஸ நிலையங்களில் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டு நீதிமன்ற பிணையில் வெளிவந்துள்ளதுடன் வழக்கு தொடர்ந்து இடம்பெற்றுவருவதாக பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

இச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

# இந்திய முப்படைத் தளபதியின் மறைவுக்கு சபையில் அனுதாபம்

## -தமிழ்க் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி தெரிவித்தன-

பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்

இந்திய முப்படைத்தளபதியான பிபின் ராவத்தின் மரணத்துக்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பும் தமிழ் முற்போக்கு கூட்டணியும் சபையில் அனுதாபம் தெரிவித்தன.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிதி அமைச்சு ,பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சு ,நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு,சமுர்த்தி உள்ளக பொருளாதார ,நுண்நிதிய ,சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே தமிழ் தேசியக்கூட்டமைப்பின் எம்.பி. யான ஸ்ரீதரனும் தமிழ் முற்போக்கு கூட்டணி எம்.பி. யான இராத கிருஷ்ணனும் தமது கட்சிகள் சார்பில் அனுதாபங்களை பதிவு செய்தனர்.

இந்திய முப்படைத்தளபதியான பிபின் ராவத்,அவருடைய மனைவி உள்ளிட்ட 14 பேர் தமிழ் நாட்டின் வான் பகுதியில் ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர். இந்திய பாரத தேசம் இன்று மிக சோகமயமாக அந்த முப்படைகளின் தளபதிக்கு அஞ்சலி செலுத்துகின்ற நாளில் இந்த உயர்ந்த சபைக்கூடாக நாங்களும் எங்களுடைய இரங்கலையும் கவலையையும் தெரிவித்துக்கொள்கின்றோம். பாரதத்தின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம் என்றனர்.



கோண்டாவில் சி.சி.ரி.எம்.எஸ். பாடசாலை பிள்ளைகளின் குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்கும் முகமாக பூமணி அம்மா அறக்கட்டளையால் புலம்பெயர்ந்த மக்களின் உதவியுடன் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டது.(ஜெ-30)

# வீட்டுப்படியில் தவறி விழுந்தவர் உயிரிழப்பு

தலவாக்கலை ஹொலிரூட் பகுதியில் ஆண் ஒருவர் படியில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் ஒரு பிள்ளையின் தந்தையான இராமையா இந்திரகுமார் (வயது 52) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவரது மனைவி சில வருடங்களுக்கு முன் உயிரிழந்துவிட்டதாகவும் அந்த வீட்டில் இவர் மாத்திரம் வசித்து வந்ததாகவும் இவரின் ஒரே ஒரு மகன் கொழும்பில் வேலை செய்து வருவதாகவும் அயலவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இவர் மது போதையில் வீட்டிலிருந்து படிக்கட்டுகளில் இறங்கி வரும் போது தவறி விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்தை பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதோடு இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரயில் பாதையில் தலையை வைத்து குடும்பஸ்தர் தற்கொலை செய்தார்

வவுனியா-ஈரற்பெரியகுளம் பகுதியில் ரயில் பாதையில் வீழ்ந்து ஒருவர் தற்கொலை செய்துகொண்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

வெள்ளி மாலை கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த ரயில் வவுனியா-ஈரற்பெரிய குளம் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது ஒருவர் ரயில் பாதையில் தலையை வைத்து தற்கொலை செய்துகொண்டார். சம்பவத்தில் வவுனியா தவசிகுளம் பகுதியை சேர்ந்த கந்தையா ரவி என்ற 55 வயதான குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

அவரது உடமையில் இருந்து கடிதம் ஒன்றும் மீட்கப்பட்டதுடன், குடும்ப விவகாரமே இந்தத் தற்கொலைக்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் ஹிஷாலினிக்கு நீதி கோரி வலியுறுத்தல்




சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு பெண்களுக்காக குரல் கொடுக்கும் அமைப்பான புரொடெக்ட் .அமைப்பின் தலைமையில் நேற்றைய தினம் டயகம தோட்டம் முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு முன்பாக விழிப்புணர்வு வீதி நாடகமும், கவனயீர்ப்பு போராட்டமும் இடம்பெற்றது.

சிறுவர் தொழில் மற்றும் சிறுவர்களை வீட்டுத் தொழிலுக்கு அமர்த்துவதை நிறுத்து எனும் தொனிப்பொருளில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 4 மாதங்களுக்கு முன்பு கொழும்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியூதீன் வீட்டில் பணிப்புரிந்துக் கொண்டிருந்த 16 வயதுடைய ஹிஷாலினியின் மரண விசாரணை இதுவரை இழுபறியாக இருப்பதாகவும் இதற்கு உடனடியாக தீர்வு கோரியும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

அத்தோடு, மக்கள் எதிர்நோக்கும், காணி, தொழிலாளர்களின் பிரச்சினைகள், அத்தியாவசிய பொருட்களுக்கான விலைவாசி அதிகரிப்பு, கல்வி தொடர்பான பிரச்சினைகள், சிறுவர், பெண்கள் உரிமைகள் போன்ற விடயங்கள் தொடர்பில் பதாதைகளை ஏந்தியவாறு எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதில் அரச சார்பற்ற அதிகாரிகள், சிவில் அமைப்பினர், உட்பட புரொடெக்ட். அமைப்பின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், சமூக ஆர்வலர்கள், மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.


## மரண அறிவித்தல்



## சின்னையா செகராசசிங்கம்

வதிரி அடைப்பை பிறப்பிடமாகவும் உதயப்பெருமாள் வளவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா செகராசசிங்கம் அவர்கள் நேற்று (10.12.2021) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா -சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவகுரு-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவகாமியம்மா அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பறுவதம் அவர்களின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சிவலோகநாதன் மற்றும் சிவபாலசிங்கம் (கனடா), காலஞ்சென்ற குணசிங்கம், ரவிச்சந்திரா (கனடா), ஜெயச்சந்திரா, சிவச்சந்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்திராதேவி, மங்கை, காலஞ்சென்ற தவராசா மற்றும் சிவராசா, எலிசன், காலஞ்சென்றவர்களான கனகசிங்கம், தவமலர் மற்றும் செல்வமலர், ரவிச்சந்திரன், காலஞ்சென்ற சந்திரமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும், திரு.திருமதி செந்தூரன்-அஜந்தினி, அரவிந்தன்- சுமித்திரா, அசோக் -அபிராமி, செழியன்-கோகிலவாணி, சுஜீவன்- சுகன்யா, மேனுஜன்-பிரியங்கா, அமிர்தன்-பவித்திரா மற்றும் சேந்தன், துஷிக்கா, சகானா ஆகியோரின் அன்புப் பேரனும், சாதனா, சாகித்தியா, கீர்த்திகா, ஆதித்தியா, அனுஸ்கா, ஆதவன், ஹாஷனா, கோவர்த்தனன், வகினாளினி ஆகியோரின் அன்பு பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.12.2021) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.

தொ.பே : 0212263505, 0771702505, 0765412631

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 20 * 05 * 1955



உதிர்வு 09 * 11 * 2021

அமரர்

## வேலன் அருளம்பலம்

யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தில் கற்பிக்கும் ஆசிரியர் திரு.அ.அருள்குமரன் அவர்களின் தந்தை வேலன் அருளம்பலம் அவர்கள் கடந்த (09.11.2021) அன்று சிவபதமடைந்து வீட்டுக்கிருத்திய நாளாகிய (11.12.2021) இன்று அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம் ஆசிரியர் நலன்புரிச் கழகம்.

## சிறு விளம்பரங்கள்

### மணமகன் தேவை

கைதடி விஸ்வகுலம் (ஆச்சாரி) 1991 பிறந்தவர் புனர்பூசம் மிதுனராசி, 8இல் செவ்வாய் கி.பாவம் 25 1/2 உயரம் 157 cm B.A. Archaeology Special Degree அபிவிருத்தி உத்தியோகத்தராகவுள்ள மணப் பெண்ணுக்கு. படித்த அரச பணிபுரியும் மணமகனும் யாழிந்து வேளாளர் 2000 ஆண்டு (21 வயது) சுவாதி துலாம் ராசி கி.பாவம் 5 1/2 உயரம் 159 cm A/L Dip.in.U.K approved Certificate Legal Studies. மணப்பெண்ணுக்கு வெளிநாடுகளில் படித்த குடியுரிமையுடைய மணமகன் தேவை. சிவாலயா சர்வதேச திருமண நிலையம் 82/3 மில் ஒழுங்கை மல்லாகம் யாழ்ப்பாணம் 0779694009/ 076652890

### மணமகள் தேவை

யாழிந்து வேளாளர் (சைவபோசனம்) 1978 வருடம் அத்தம் கன்னி ராசி 7 இல் செவ்வாய் கிரகபாவம் 36 உயரம் 5'8'' மாதிறம் BSc, M.Ed ஆசிரியராகவுள்ள மணமகனுக்கு படித்த அரச பணிபுரியும் சைவபோசன மணமகள் தேவை. சைவபோசன மணமக்கள் தேவைக்கு விபரங்களுடன் உடன் அணுகவும். சிவாலயா சர்வதேச திருமண நிலையம் 82/3 மில் ஒழுங்கை, மல்லாகம், யாழ்ப்பாணம். 0779694009/ 0766528901

## -ஆஷஸ் டெஸ்ட் போட்டி-

# மலன்-ஜோ ரூட் நிதான ஆட்டம் இங்கிலாந்து 220 ஓட்டங்கள்







பிரிஸ்பேன் டெஸ்ட் போட்டியில் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணியில் இரண்டு வீரர்கள் அரைசதம் அடித்து அசத்தியுள்ளனர். அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் இடையிலான 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரின் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனில் நேற்று முன்தினம் தொடங்கியது.

இதில் நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாட்டம் செய்த இங்கிலாந்து 50.1 ஓவர்களில் 147 ஓட்டத்தில் சுருண்டது. அவுஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர் கம்மின்ஸ் 5 விக்கெட்டுகளை சாய்த்தார். அதன் பிறகு மழை பெய்ததால் முதல் நாள் ஆட்டம் அத்துடன் முடிவுக்கு வந்தது.

இந்த நிலையில் 2 ஆவது நாளான நேற்று அவுஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்சை ஆடியது. தொடக்க ஆட்டக்காரர்களாக டேவிட் வார்னரும், மார்கஸ் ஹாரிசும் களம் புகுந்தனர். ஹாரிஸ் 3 ஓட்டத்திலும் மார்னஸ் லபுஸ்சேன் 734 ஓட்டத்திலும் ஆட்டமிழந்தார்.

மிடில் வரிசையில் களம் கண்டு நிலைத்து நின்று ஆடிய டிராவிஸ் ஹெட் இங்கிலாந்து பந்து வீச்சை நொறுக்கித் தள்ளினார். ஒருநாள் போட்டி போன்று அதிரடியாக விளையாடி ரன்களை சேகரித்த அவர் 85 பந்துகளில் தனது 3 ஆவது சதத்தை நிறைவு செய்தார். ஆஷஸ் வரலாற்றில் இது 3 ஆவது அதிவேக சதமாகும். அதே சமயம் இந்த மைதானத்தில் ஒரு வீரரின் மின்னல்வேக சதமாக அமைந்தது.

2-ஆவது நாள் முடிவில் அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 84 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 343 ஓட்டங்கள் எடுத்த நிலையில் 3 ஆவது நாள் ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

சிறப்பாக விளையாடி வந்த டிராவிஸ் ஹெட் 152 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மார்க் உட் பந்தில் போல்டானார். இறுதியில் அவுஸ்திரேலிய அணி 104.3 ஓவர்களில் 425 ஓட்டங்கள் எடுத்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இங்கிலாந்து தரப்பில் மார்க் உட் அதிகபட்சமாக 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதன் பிறகு இரண்டாவது இன்னிங்சை ஆடத் தொடங்கியது இங்கிலாந்து அணி. தொடக்க வீரர்களாக களமிறங்கிய ஹமீத் 27 ஓட்டத்திலும் ரோரி பர்ன்ஸ் 13 ஓட்டத்திலும் ஆட்டமிழந்தனர்.

இதன் பிறகு ஜோடி சேர்ந்த டேவிட் மலன் மற்றும் ஜோ ரூட் சிறப்பாக விளையாடி ஓட்டங்களை குவித்தனர்.

மூன்றாவது நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 2 விக்கெட் இழப்பிற்கு 220 ரன்கள் குவித்துள்ளது.

மலன் 80 ஓட்டம், ஜோ ரூட் 86 ஓட்டத்துடனும்; உள்ளனர். இங்கிலாந்து அணி, அஸ்திரேலிய அணியை விட 58 ஓட்டங்கள் பின்தங்கியுள்ளது. நாலாவது நாள் ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

## -ஆஷஸ் டெஸ் தொடரில் ருசிகரம்-

# அவுஸ்திரேலிய இரசிகைக்கு காதலை வெளிப்படுத்திய இங்கிலாந்து இரசிகர்



அவுஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான ஆஷஸ் தொடரின் முதல் டெஸ்ட் போட்டியில் ருசிகர சம்பவம் ஒன்று அரங்கேறியுள்ளது.


அவுஸ்திரேலியா -இங்கிலாந்து அணிகள் மோதும் முதலாவது டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் நடந்து வருகிறது. இந்த போட்டியின் 3 ஆவது நாளில் ஒரு ருசிகர சம்பவம் அரங்கேறியுள்ளது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் இரசிகரான ராப், பிரிஸ்பேனில் நடந்து வரும் முதல் ஆஷஸ் டெஸ்ட் போட்டியின் நேற்றைய 3 ஆவது நாளில் கிரிக்கெட் மைதானத்தில் இருந்த இரசிகர்களின் முன் தனது அவுஸ்திரேலிய காதலியான நாட் இடம் தனது காதலை வெளிப்படுத்தினார்.

நான்கு வருடம் ஆகிறது. என்னை திருமணம் செய்து கொள்வாயா? என அவர் கேட்டார்.

இதனை சற்றும் எதிர்பாராத நாட் சிரித்தபடி அவரது காதலுக்கு ஓகே சொல்லி கட்டி அணைத்தப்படி முத்ததை இருவரும் பறிமாரி கொண்டனர். இந்த சம்பவத்தை பார்த்த இரசிகர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர். 2017-2018 ஆம் ஆண்டு நடைபெற்ற அவுஸ் தொடரின் போது ஆஸ்திரேலியா இரசிகையான நாட்டை முதன் முதலில் ராப் சந்தித்துள்ளார். இதனையடுத்து அவர்கள் இருவரும் நண்பர்களாக இருந்துள்ளனர்.

# விராட் கோலி ஒருநாள் கப்டன் பதவியில் இருந்து அதிரடி நீக்கம்




இந்திய கிரிக்கெட் அணியில் 3 வடிவிலான போட்டிகளுக்கும் (டெஸ்ட், ஒருநாள் போட்டி, 20 ஓவர்) விராட் கோலி கப்டனாக பணியாற்றினார்.

டோனிக்கு பிறகு அவர் 3 போட்டிகளுக்கும் கப்டனாக செயல்பட்டு வந்தார். உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான விராட் கோலியின் துடுப்பாட்டத் திறன் சமீப காலமாக மிகவும் பாதிக்கப்பட்டது.

இதனால் கப்டன் பதவியில் இருந்து அவர் விலகுவது நல்லது என்று கருத்து எழுந்தது. விமர்சனங்கள் காரணமாக 20 ஓவர் கப்டன் பதவியில் இருந்து விலகுவதாக அவர் அறிவித்தார்.

சமீபத்தில் நடந்த 20 ஓவர் உலக கிண்ணப் போட்டிக்கு பிறகு கப்டன் பதவியை துறப்பதாக அவர் போட்டிக்கு முன்பே தெரிவித்தார்.

இதற்கிடையே ஒருநாள் போட்டிக்கான கப்டன் பதவியில் இருந்தும் விராட் கோலி விலகுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.2023 ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெறும் ஒருநாள் போட்டி உலக கிண்ணத்தை கருத்தில் கொண்டு இந்திய அணிக்கு புதிய கப்டனை நியமிக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை முடிவு செய்து உள்ளது. இதைத்தொடர்ந்து கப்டன் பொறுப்பில் இருந்து விலகுமாறு விராட் கோலியை கிரிக்கெட் சபை வலியுறுத்தி வந்தது. ஆனால் அவர் ஒரு நாள் போட்டிக்கான கப்டன் பதவியில் இருந்து விலக மறுத்து விட்டார்.

இதைத்தொடர்ந்து கப்டன் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டு அவருக்கு பதிலாக ரோகித்சர்மா புதிய கப்டனாக நியமிக்கப்பட்டார்.

விராட் கோலி தானாக முன்வந்து ஒருநாள் போட்டி கப்டன் பதவியில் இருந்து விலக வேண்டும் என்று கிரிக்கெட் சபை விரும்பியது. இதற்காக அவருக்கு 48 மணி நேரம் கெடு விதிக்கப்பட்டது.

ஆனால் கோலியோ கப்டன் பதவியைவிட்டு செல்ல விரும்பவில்லை. கிரிக்கெட் சபையின் கெடுவை நிராகரித்தார்.

இதைத்தொடர்ந்து 49 ஆவது மணி நேரத்தில் ரோகித்சர்மாவை கப்டனாக நியமித்து கிரிக்கெட் சபை அதிரடி முடிவை எடுத்தது. விராட் கோலியை கப்டன் பதவியில் இருந்து நீக்கியது.

மேலும் இந்திய அணியில் பிளவு இருந்ததாகவும் இதற்கு கோலியின் ஆதிக்கம்தான் காரணம் என்றும் இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் அவரது கப்டன் பதவி பறிக்கப்பட்டு உள்ளதாக கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவித்து உள்ளன.டெஸ்ட் அணிக்கு மட்டுமே 33 வயதான கோலி கப்டனாக இருப்பார். ஒருநாள் போட்டி, 20 ஓவர் போட்டிகளுககு ரோகித்சர்மா கப்டனாக பணியாற்றுவார்.

விராட் கோலி 95 ஒருநாள் போட்டிக்கு கப்டனாக இருந்துள்ளார். இதில் 65 இல் வெற்றி கிடைத்தது. 27 போட்டியில் தோல்வி ஏற்பட்டது. ஒரு ஆட்டம் சமநிலையில் முடிந்தது. 2 போட்டி முடிவு இல்லை.ஐம்பது 20 ஓவரில் கப்டனாக இருந்து 30 இல் வெற்றி பெற்றார். 16 இல் தோல்வி ஏற்பட்டது. 2 ஆட்டம் சமநிலையில் முடிந்தது. 2 போட்டி முடிவு இல்லை.

# பாராளுமன்ற உறுப்பினர்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி



பாராளுமன்ற உறுப்பினர்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று பாராளுமன்ற பிலியட் அறையில் நடைபெற்றது. ஐந்து பிரிவுகளின் கீழ் போட்டிகள் நடத்தப்பட்டன. டாம் போட்டியில் பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.எச்.எம்.தர்மசேன வெற்றிபெற்றதுடன், பாராளுமன்ற உறுப்பினர் ரோஹன பண்டார இரண்டாவது இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் கயஷான் நவனந்த சதுரங்கம் , கரம் மற்றும் ஸ்னூக்கர் ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்றார்.

மேசைப்பந்துப் போட்டியில் பாராளுமன்ற உறுப்பினர் வருண லியனகே வெற்றிபெற்றார். பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார சதுரங்கம் மற்றும் ஸ்னூக்கர் போட்டிகளில் இரண்டாவது இடத்தைப் பெற்றுக் கொண்டார்.


கரம் விளையாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகரவுக்கு இரண்டாவது இடம் கிடைத்ததுடன், மேசைப் பந்துப் போட்டியில் பாராளுமன்ற உறுப்பினர் கயஷான் நவனந்தவுக்கு இரண்டாவது இடம் கிடைத்தது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் இரண்டாவது வருடமாக இம்முறை நடத்தப்பட்டது.

ஏ.உபாலி பிரேமசந்திர, கே.பி.நந்ததேவ, எச்.ஜி.அனுஸ்க மதுரங்க ஆகிய பாராளுமன்ற பணியாளர்கள் போட்டிகளின் நடுவர்களாகப் பணியாற்றியிருந்தனர்.

இந்தப் பரிசளிப்பு நிகழ்வில் ஆளும் கட்சியின் முதற்கோலாசான் அமைச்சர் ஜோன்டன் பெர்ணாண்டோ, எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக, படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாந்து உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# குறுந்தூர ஓட்ட வீரர் இமாஷ ஏஷான் மீது ஊக்கமருந்து புகார்




இலங்கையின் குறுந்தூர ஓட்ட வீரரான இமாஷ ஏஷான் மீது தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்து உட்கொண்ட குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதனால் அவருக்கு மெய்வல்லுநர் போட்டிகளில் பங்கேற்பதற்கான தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை தடை செய்யப்பட்ட ஊக்க மருந்து தடுப்பு நிலைய பணிப்பாளர் வைத்தியர் சீவலி ஜயவிக்ரம அறிவித்துள்ளார்.

இதன்படி, விசாரணைகளை ஆரம்பிப்பதற்காக இலங்கை தடை செய்யப்பட்ட ஊக்க மருந்து தடுப்பு நிலையத்துக்கு இலங்கை மெய்வல்லுநர் சம்மேளனத்தின் பிரதிநிதியொருவருடன் எதிர்வரும் 15 ஆம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு வருகை தரும்படி இமாஷ ஏஷானுக்கு எழுத்து மூலமான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக ஸ்லாடா பணிப்பாளர் குறிப்பிட்டார்.

# ஒருநாள் கப்டனாக ரோகித் நியமிக்கப்பட்டது ஏன்? -கங்குலி விளக்கம்-

ஒருநாள் போட்டியில் கப்டனாக ரோகித் சர்மா சிறப்பாக செயல்பட வாழ்த்துக்கள் என பி.சி.சி.ஐ. தலைவர் சவுரவ் கங்குலி தெரிவித்துள்ளார். இந்திய கிரிக்கெட் அணியின் ரி20 கப்டன் பதவியிலிருந்து விராட் கோலி சமீபத்தில் விலகியதால், இந்திய அணியின் ரி20 போட்டி கப்டனாக ரோகித் சர்மா நியமிக்கப்பட்டார். இதுதொடர்பாக, பி.சி.சி.ஐ. தலைவர் சவுரவ் கங்குலி கூறியதாவது: விராட் கோலியிடம் ரி20 கப்டன் பொறுப்பிலிருந்து விலக வேண்டாம் என இந்திய கிரிக்கெட் சபை கேட்டுக்கொண்டது. ஆனால் அவர் ரி20 கப்டன் பொறுப்பிலிருந்து விலகினார். இதையடுத்து, இரண்டு வெள்ளை பந்து வடிவங்களுக்கு இரண்டு கப்டன்களை வைத்திருப்பது சரியானதாக இருக்காது என அணி தேர்வாளர்கள் கருதினர். எனவே ஒருநாள் தொடரிலும் ரோகித்தை ஒருநாள் தொடரின் கப்டனாக்க முடிவு செய்யப்பட்டது. ரோகித் சர்மாவின் தலைமைத் திறன்களில் எங்களுக்கு முழு நம்பிக்கை உள்ளது. மேலும், விராட் கோலி டெஸ்ட் போட்டிகளில் கப்டனாக நீடிப்பார். இந்திய கிரிக்கெட் சிறந்த வீரர்களின் கைகளில் உள்ளதாக நாங்கள் நம்புகிறோம். வெள்ளைப் பந்து வடிவத்தில் கப்டனாக விராட் கோலியின் பங்களிப்புக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம் என் தெரிவித்தார்.



இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சிறுவர்களுக்கு கோவிட் தடுப்பூசி வழங்குவது குறித்து ஜனாதிபதியின் விசேட பணிப்புரை



16 முதல் 19 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசியும், 12 முதல் 15 வயதுக்குட்பட்ட அனைத்து சிறுவர்களுக்கும் முதலாவது டோஸ் தடுப்பூசியினையும் பெற்றுக் கொடுக்க அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

இதன்படி, கல்வி அமைச்சுடன் இணைந்து திட்டமிட்டு தடுப்பூசியை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் கொவிட் நோயை கட்டுப்படுத்தும் விசேட குழுவுடனான கலந்துரையாடலின் போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையினால், விமானப் பயணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருப்பது கூட்டத்தில் தெரியவந்துள்ளது.

இதன்படி, சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை, மேலும் தளர்த்தவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

## இந்திய முப்படைத் தளபதியின் மறைவிற்கு பிரதமர் மஹிந்த இரங்கல்



இந்திய முப்படைகளின் தளபதி ஜெனரல் பிபின் ராவத்தின் மறைவு குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு தனது இரங்கலை தெரிவித்தார்.

இந்திய முப்படைகளின் தளபதி ஜெனரல் பிபின் ராவத், அவரது பாரியார் மதுலிகா ராவத் மற்றும் 11 பேர் கடந்த 07 ஆம் திகதி இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்தமை தொடர்பில், இந்திய அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜெனரல் பிபின் ராவத், அவரது பாரியார் உள்ளிட்ட பதினான்கு பேர் பயணித்த ஹெலிகொப்டர் தமிழ்நாட்டில் விபத்திற்குள்ளாகியது. இத்துயரச் சம்பவத்தில் உயிரிழந்த அனைவரினதும், குடும்ப உறுப்பினர்களுக்கும், உறவினர்களுக்கும் இலங்கை அரசாங்கத்தினதும், மக்களினதும் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாக பிரதமர் குறிப்பிட்டார்.

இந்திய-இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு பெரும் பங்களிப்பை வழங்கிய ஒரு நண்பர் என்ற வகையில், ஜெனரல் பிபின் ராவத் அவர்களது நினைவு மிக நீண்டகாலமாக நிலைத்திருக்கும் என்றும் பிரதமர் தனது இரங்கல் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையில் பரவும் இன்னுமொரு ஆபத்தான நோய் 5 மரணங்களும் பதிவு



இலங்கையின் - இரத்தினபுரி மாவட்டத்தில் விவசாயம் உள்ளிட்ட நிலத்துடன் தொடர்புடைய தொழில்களை வாழ்வாதாரமாகக் கொண்ட பலரும், எலிக்காய்ச்சல் அச்சத்திலேயே தமது அன்றாட கடமைகளில் ஈடுபடுகின்றனர்.

இலங்கையில் 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உயிரிழப்புக்களையும், ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான மக்களுக்கு பாதிப்பினையும், கொவிட்-19 ஏற்படுத்தியுள்ள நிலையில், மறுபுறம் எலிக்காய்ச்சல் இலங்கையில் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது.


எனினும் கொவிட்-19 தொற்றின் வீரியம், எலிக்காய்ச்சல் குறித்த அவதானத்தை தடுத்துள்ளது. இரத்தினபுரி மாவட்டத்தில், ஜனவரி மாதம் முதல் ஒக்ரோபர் வரையான காலப் பகுதியில் மாவட்டத்தில் 19 சுகாதாரப் பிரிவுகளில் 344 பேர் எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 5 மரணங்களும் பதிவாகியுள்ளன.

பெல்மடுல்ல, நிவித்திகல, கலவான, கிரிஎல்ல மற்றும் எல்பாத ஆகிய பொது சுகாதார வைத்திய அதிகார பிரிவுகளில் எலிக்காய்ச்சலினால், 5 மரணங்கள் பதிவாகியுள்ளன. பலாங்கொடைப் பிரதேசத்திலேயே அதிகளவானோர் இனங்காணப்பட்டுள்ளனர்.

குறித்த பிரிவில் 35 பேர் எலி காய்ச்சலினால், பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த வருடமும் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் அதிகம் இனங்காணப்பட்ட மாவட்டமாக, இரத்தினபுரி மாவட்டமே பதிவாகியுள்ளது. இரத்தினபுரி இரத்தினக்கல் அகழ்வு மற்றும் வியாபாரத்திற்கு உலக புகழ்பெற்ற இடம் என்றாலும், அந்த மாவட்டத்தில் விவசாயமும் பெரும்பாலான மக்களின் வாழ்வாதாரமாக காணப்படுகின்றது.

இரத்தினபுரி மாவட்டம் வருடாந்தம் சராசரியாக 50 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை உற்பத்தி செய்கின்றது. அதனை விடவும், பயறு உள்ளிட்ட வேறு பயிர்களும் செய்கைப் பண்ணப்படுகின்றன. இவ்வாறு விவசாயத்தில் ஈடுபடும் மக்களே, எலிக்காய்ச்சலினால் பெரிதும் பாதிக்கப்பட்டுகின்றமை சுட்டிக் காட்டத்தக்கது.

## பாக்கு மரத்தில் ஏறிய சிறுத்தை விரட்டியடிப்பு




ஹட்டன் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட எபோட்சிலி மொன்டிபெயார் தோட்டத்தில், பாக்கு மரத்திலிருந்த சிறுத்தையை, பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து விரட்டியடித்தனர்.

காட்டுப்பகுதியிலிருந்து மொன்டிபெயார் குடியிருப்புக்குள் நுழைந்த சிறுத்தைப்புலியை பிரதேசவாசிகள் விரட்டியபோது, வீட்டுத்தோட்டத்தில் உள்ள பாக்குமரத்தில் ஏறியது.

சம்பவம் தொடர்பில் பிரதேசவாசிகள் ஹட்டன் பொலிஸாருக்கு, நேற்றுக் காலை அறிவித்தனர். இதனையடுத்து, குறித்த இடத்துக்கு விரைந்த பொலிஸார், பட்டாசு கொளுத்தி சிறுத்தையை விரட்டியத்தனர்.

## இலங்கையில் கொரோனாவில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு




கொரோனா தொற்றிலிருந்து மேலும் 377 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை கொரோனா தொற்றிலிருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 544,200 ஆக அதிகரித்துள்ளது.இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 570,672 அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதே வேளை, நாட்டில் கொரோனா வைரஸ் (கொவிட் 19) தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14,555ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முச்சக்கர வண்டி விபத்தில் தாயும் மகனும் காயம்



ஹட்டன்-பொகவந்தலாவை பிரதான வீதியின் கிளங்கன் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக, நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

சாமிமலை ஒல்டனிலிருந்து ஹட்டன் நோக்கி வந்த தனியார் பஸ்ஸும் ஹட்டனிலிருந்து நோர்வூட் சென்ற முச்சக்கர வண்டியுமே, மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்றுக் காலை 09 மணியளவில் இடம்பெற்ற இவ் விபத்தில், முச்சக்கரவண்டிச் சாரதியும் அதில் பயணித்த அவரது தாயாரும், காயமடைந்து டிக்கோயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். முச்சக்கர வண்டியின் அதிக வேகமே விபத்திற்கான காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்து தொடர்பில், பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## படுகொலை செய்யப்பட்ட பிரியந்தவின் பிள்ளைகளுக்கு சஜித் பிரேமதாஸா நிதியுதவி



பாகிஸ்தானின் சியல்கோட்டில் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட, பிரியந்த குமாரவின் இரண்டு பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக, தலா 1 மில்லியன் ரூபா பணத்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வழங்கியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண்ணின் வீட்டிற்கு நேற்று (வெள்ளிக்கிழமை) நேரில் சென்று பார்வையிட்டதன், பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் இந்த நன்கொடையை வழங்கியுள்ளார்.

பண நன்கொடைகள் தவிர, பிரியந்தவின் பிள்ளைகளில், ஒருவரின் கல்விக்காக மடிக்கணினி ஒன்றையும், எதிர்க்கட்சித் தலைவர் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

## பௌத்த மதகுருமாரை தீவிரவாதிகளாக சித்தரிக்க முயற்சி

### ஞானசாரதேரர் கடும் சீற்றம்



பௌத்த மத குருமாரை இஸ்லாமிய தீவிரவாதிகளாகவும் கிறிஸ்தவ அடிப்படைவாதிகளாகவும் கட்டமைக்க சில தரப்பினர் செயற்பட்டு வருவதாக, கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

சிங்கள வானொலி ஒன்றில் ஒலிப்பரப்பான கலந்துரையாடலின் போதே, அவர் மேற்கொண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது பௌத்த பிக்குமார் இருவரை தொலைபேசியின் ஊடாக கெட்ட வார்த்தைகளால் திட்டியமை சம்பந்தமாக, ஞானசார தேரர் தனது நிலைப்பாட்டை தெளிவுப்படுத்தியதுடன், எவரையாவது திட்டும் தேவை இருந்தால், திட்டுவேன் எனவும் கூறியுள்ளார்.

இதனால், இது தனிப்பட்ட விடயம். இவை அனைத்தும் திட்டமிட்டு நடக்கின்றன. முகநூல், யூடியூப் வலையொளித்தளம் என்பன காவல்துறையோ, நீதித் துறையோ அல்ல.

தீவிரவாதத்தை இல்லாதொழிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நான் உட்பட பிக்குமாரை மதத் தீவிரவாதிகளாக முத்திரை குத்துகின்றனர் எனவும் ஞானசார தேரர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் பிக்கு என்ற எண்ணக்கருவை சமூகமயப்படுத்தியமை சம்பந்தமாக, ஞானசார தேரர், மினிபுர தபோவனவாசி ரதன தேரர் மற்றும் கிருளபன தம்ம விஜய தேரர் ஆகியோர் கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தி திட்டும் தொலைபேசி உரையாடல் அடங்கிய குரல் பதிவுகள் தற்போது சமூக ஊடகங்களில் பிரபலமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் உச்சத்தை தொடப் போதும் அரிசியின் விலை? இராஜாங்க அமைச்சர் வெளியிட்ட அதிர்ச்சித் தகவல்



இலங்கையில் ஒரு கிலோ கிராம் அரிசியில் விலை 500 ரூபாவை விடவும் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்சவின் குடும்ப உறுப்பினரான இராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கும் போது,

முன்னதாக ஒரு தொன் யூரியா 278 அமெரிக்க டொலர்களுக்கு இறக்குமதி செய்யப்பட்டது. இந்த நிலையில், இன்று ஒரு தொன் யூரியாவின் விலை, 1282 அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது. அந்த விலையில், யூரியாவைக் கொண்டு வந்து விவசாயம் செய்தால், ஒரு கிலோ அரிசி 500 ரூபாவைத் தாண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இன்று இலங்கையில் 25 கிலோ யூரியா மூட்டை, 9000 ரூபாவிற்கும் மேலாக, விற்பனை செய்யப்படுவதாகவும், அவர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

## இலங்கையின் அந்நியச் செலாவணிக் கையிருப்பு குறித்து வெளியாகியுள்ள அதிர்ச்சி தரும் தகவல்




இரண்டு வாரங்களுக்குப் போதுமான அந்நிய செலாவணியே கையிருப்பிலிருப்பதாக, அதிர்ச்சிகரமான தகவலை இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் டப்ளியூ.ஏ.விஜேவர்தன வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில், நாடு எதிர்நோக்கியிருக்கும் பாரதூரமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்ல வேண்டிய சந்தர்ப்பம் கூட தாமதமாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் நாட்டில் அந்நிய செலாவணிக் கையிருப்பானது, 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைந்துள்ளது எனவும், விஜேவர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அந்நிய செலாவணிக் கையிருப்பானது இரண்டு வாரங்களுக்கான அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கு மாத்திரமே போதுமானது எனவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைமையின் கீழ், நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்களின் கையிருப்பானது கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அரசாங்கத்தின் அசமந்தமான செயற்பாடுகளினால் எதிர்வரும் ஏப்ரலில் நாட்டில் பாரிய உணவுத் தட்டுப்பாடு

### - பேராசிரியர் மெத்திகா விதானகே எச்சரிக்கை-



எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் நாட்டில் மக்கள் உண்பதற்கு உணவு இல்லாத நிலைமை ஏற்படுமென, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞானப் பீடத்தின் பேராசிரியர் மெத்திகா விதானகே எச்சரித்துள்ளார்.

பெரும் போகப் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்க வேண்டுமென்ற போதிலும் அதற்கு தேவையான உரத்தை வழங்குவதற்கு அரசாங்கம் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும், அவர் கூறியுள்ளார். சேதனப் திரவப் பசளையை மாத்திரம் பயன்படுத்துவதால், நாட்டிற்குப் போதுமான அறுவடை கிடைக்குமென எதிர்பார்க்க முடியாது.

பெரும் போகம் என்பது நாட்டிற்கு முக்கியமான, அதிகளவில் அறுவடை கிடைக்கும் போகம். இந்தப் போகத்தில் பரீட்சித்துப் பார்க்க முடியாது. கமத்தொழில் துறையின் நிபுணர்கள், ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் குறித்து, அரசாங்கம் கவனம் செலுத்தாது, முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்கள் காரணமாக, உணவு பற்றாக்குறை ஏற்படுவதை தவிர்க்க முடியாது எனவும், மெத்திகா விதானகே குறிப்பிட்டுள்ளார்.

# தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வே பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படை

## -சித்தார்த்தன் எம்.பி.-

பா.கிருபாகரன் - ந.ஜெயகாந்தன்

வரவு-செலவுத்திட்டத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக கடனுக்காக அமைச்சர் பசில் ராஜபக்ச அல்லல்பட்டுத்திரிகின்றார் . இந்த வரவு-செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும்போதே அவர் கடன் கேட்டு இந்தியாவுக்கு செல்ல வேண்டிய நிலையில் இருக்கின்றார் . எனவே தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வைக்காண்பதுதான் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படை யாக இருக்க முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட எம்.பி. யான த. சித்தார்த்தன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிதி அமைச்சு, பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சு ,நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு,சமுர்த்தி உள்ளக பொருளாதார,நுண்நிதிய,சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்;

பலமான. செல்வாக்குமிக்க ,அரசின் செல்வாக்குள்ள,நிதி விடயத்தில் மட்டுமல்லாது ஏனைய விடயங்களிலும் கூட பலமாக வுள்ள அமைச்சர்தான் பஷில் ராஜபக்ச.யுத்த காலத்தில் வட,கிழக்கிலே இருக்கக்கூடிய இடங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும்போது அந்த இடங்களுக்கு நேரடியாக சென்று அந்தப் பகுதிகளை பார்வையிட்டு அங்கு தேவையான அபிவிருத்திகள் பற்றி அங்கிருக்கக்கூடிய அரசியல் சமூக ,அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடி செயல்பட்டு வந்துள்ளார். ஆனால் இன்று அவரின் செயல்பாடுகள் இன்றுள்ள நிதி நெருக்கடியினாலோ என்ன காரணத்தினாலோ கொஞ்சம் குறைவாகவே பலரும் பார்க்கின்றனர்.

வடக்கு,கிழக்கு 30,40 வருடங்களாக யுத்தத்தை கண்டு வந்த இடம்.ஏறக்குறைய ஒரு இலட்சம் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அங்குள்ளன . அவர்களுக்கான வருமானங்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. முக்கியமாக இந்த கொரோனா காலத்திலே உலகம் முழுக்க கஷ்டங்கள் உள்ள காலத்திலே நாளாந்த வருமானங்களை பார்த்திருக்கின்ற மக்கள் மத்தியிலே



இந்த பெண் தலைமத்துவ குடும்பங்கள் மிக கஷ்டத்தில் வாடிக்கொண்டிருக்கின்றார்கள். இவர்களுக்கு ஏதாவது ஒரு வழியிலே அரசு உதவ வேண்டும்.

குடிசைக் கைத்தொழில், ஆடு வளர்த்தல் மாடு, கோழி வளர்த்தல் போன்றவற்றை அவர்களுக்கு கொடுக்கலாம் என பலர் கூறுகின் றனர். கொடுக்கலாம் அதில் பிரச்சினையில்லை. ஆனால் அதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் இன்று பல மக்களிடம் ஆட்டிறைச்சி கோழி இறைச்சி வாங்கி சாப்பிட பணம் இல்லை. இதுதான் உண்மை. ஆகவே அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய கைத்தொழில் பொருட்கள் எல்லாம் வீடுகளில் தேங்கிக்கிடக்கின்றன. இவற்றை சந்தைப்படுத்துவதற்கு உதவி செய்வதுடன் அவர்கள் அன்றாட வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கு ஏதாவது ஒரு வழியில் அமைச்சர் உதவ வேண்டும். வரவு-செலவுத்திட்டத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக கடனுக்காக அமைச்சர் பசில் ராஜபக்ச அல்லல்பட்டுத்திரிகின்றார் . இந்த வரவு-செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும்போதே அவர் கடன் கேட்டு இந்தியாவுக்கு செல்ல வேண்டிய நிலையில் இருக்கின்றார் . இந்தியா. சர்வதேச நாணய நிதியம், பங்களாதேஷ் இப்படி பல நாடுகள், அமைப்புகளிடம் கடன் கேட்கும் நிலைமையிலேயே இருக்கின்றோம்.

இவ்வளவு பொருளாதார நெருக்கடி வந்தமைக்கு மிக முக்கிய காரணம் இந்த அரசோ கொரோனாவோ மாத்திரமல்ல. ஏறக்குறைய சுதந்திரம் பெற்ற காலம் முதல் இந்த நாட்டில் இருக்கக்கூடிய ஸ்திரமில்லா ததன்மை. இது தேசிய இனப்பிரச்சினையால் வந்த பிரச்சினை. இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு பல மாநாடுகள், கூட்டங்கள், ஒப்பந்தங்கள் எல்லாம் செய்யப்பட்டன. ஒவ்வொரு ஒப்பந்தங்களும் கிழித்தெறியப்பட்டன. இந்த நாட்டுக்குள் மாத்திரமல்ல நாட்டுக்கு வெளியே கூட நடந்தன. நான் இந்த அரசை மட்டும் கூறவில்லை ஒவ்வொரு அரசும் ஒவ்வொரு முயற்சிகளை எடுக்கும் பொது அதனை எதிர்க்கட்சிகள் குழப்புவதே வழமை .திம்பு, ஒஸ்லோ பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்படாமையே இந்த ஸ்திரமற்ற நிலைமைக்கு காரணம்.

இந்த யுத்தம் முடிந்தவுடன் புலம்பெயர் தமிழர்கள் பலர் இங்கு நிதிகளைக்கொண்டு வந்து முக்கியமாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க விரும்பினர்.

அனால் அதற்கு பெரும் தடைகள் ஏற்படுத்தப்பட்டன. இன்று கூட மீன்பிடித்துறையில் முதலீடு செய்ய பலர் தயாராக இருக்கின்றபோது கூட அமைச்சர் அதனை உடனடியாக செய்ய கையெழுத்து ப்போட்டுக்கொடுத்தால் கூட தடைகள் ஏற்படுத்தப்பட்டு அந்த முதலீடு செய்ய வந்தவர்கள் திரும்பிச் சென்ற நிலைமைகளையும் நாம் பார்த்துள்ளோம். மீன்பிடி அமைச்சர் எடுத்த முயற்சிகள் எல்லாம் இந்த தடைகளினால் பின்தள்ளப்படுகின்றன. இவ்வாறான பிரச்சினைகளை நிவர்த்தி செய்தால்தான் இந்த நாடு பொருளாதார ரீதியில் முன்னேற்றம் காணும் .

முதலாவதாக தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வைக்காண்பதுதான் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படியாக இருக்க முடியும். இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமகனும் தான் இந்த நாட்டின் பிரஜை என்பதனை உணரக்கூடிய வகையில் இருந்தால் இன்று கூட வெளிநாடுகளிலிருந்து முதலீடுகளை செய்ய பலர் தயாராகவுள்ளனர்.

அதற்கு முதலீடுகளை செய்ய ஏற்படுத்தப்படும் தடைகள்,முதலீடுகள் பாதுகாக்கப்படுமா என்ற அச்சம் என்ற இரண்டையும் நீங்கள் இல்லாமல் செய்ய வேண்டும். அமைச்சர் பசிலுக்கு இதற்கான திறமை இல்லமை இருக்கின்றது. அத்துடன் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதிலும் அவரின் ஆதிக்கம் நிச்சயம் இருக்கும் என்றார்.

# எல்லா முஸ்லிம்களும் தீவிரவாதிகள் அல்லர் என்ற எண்ணத்தை தேரருக்கு விதைத்தோம்

## - கிழக்குதேசம் வஃபா பாருக் கூறுகிறார்

முஸ்லிம்கள் எல்லோரும் தீவிரவாதிகள் அல்லர் என்கிற எண்ணத்தை ஞானசார தேரரின் மனத்தில் விதைத்து உள்ளோம் என்று கிழக்குதேசம் வஃபா பாருக் தெரிவித்தார்.

ஞானசார தேரர் தலைமையிலான ஒரே நாடு ஒரே சட்டத்துக்கான ஜனாதிபதி செயலணி கடந்த வாரம் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்டது.

இது அம்பாறை மாவட்டத்துக்கு வந்தபோது தாருஸ்சபா குழுமத்தின் ஏற்பாட்டில் அதன் தலைமையகத்தில் கல்முனையில் மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது.

இதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக பொருளாளரும், கிழக்குதேசம் அமைப்பின் ஸ்தாபகருமான வஃபா பாருக் அடங்கலாக அரசியல் சமூக பொது நலனடக செயற்பாட்டாளர்கள் பங்கேற்றதுடன் செயலணி முன்னிலையில் கருத்துகளை பதிவேற்றினார்கள்.



நாம் இது தொடர்பாக வஃபா பாருக்கை நேற்று வெள்ளிக்கிழமை தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஞானசார தேரர் தேசியவாத சிந்தனை உடையவர். அவருக்கென தனியான பாதை ஒன்றை வகுத்து செயற்பட்டு கொண்டு இருக்கின்றார். இந் நாட்டில் எல்லா மக்களுக்கும் பொதுவான சட்டத்தை கொண்டு வர ஜனாதிபதி முயல்கின்றார். இதற்கான ஆலோசனைகளை பெற செயலணி அமைத்து அதன் தலைவராக ஞானசார தேரரை நியமித்து உள்ளார்.

ஞானசார தேரருக்கு முஸ்லிம்கள் குறித்து அபிப்பிராயம் உள்ளது. எல்லா முஸ்லிம்களும் தீவிரவாத போக்கு உள்ளவர்கள் என்று நம்புகின்றார். அவரின் நம்பிக்கை தவறானது.

நாம் அவரை வரவேற்றோம். அவருக்கு அன்பளிப்புகள் வழங்கினோம். இதன் மூலமாக முஸ்லிம்கள் குறித்த அவரின் எண்ணம் மாறும் என்பது எமது நம்பிக்கை. அதற்கான சமிக்ஞைகள் தெரிய தொடங்கி உள்ளன.

ஜனாதிபதிக்கு செயலணி பெப்ரவரி மாதம் அதன் இறுதி அறிக்கையை சமர்ப்பிக்க உள்ளது. அதில் இம்மாற்றங்கள் எதிரொலிக்கும் என்பது எமது விசுவாசம். முக்கியமாக முஸ்லிம்கள் எல்லோரும் தீவிரவாதிகள் அல்லர் என்று ஞானசார தேரர் தலைமையிலான செயலணி அறிக்கையிட வேண்டும். அதுவே எமது பெருவிருப்பம் ஆகும்.

# நீரேந்தும் பகுதிகளில் நிரம்பி இருக்கும் குப்பைகளை சேகரிக்கும் வேலைத்திட்டம்



காசல்ரீ நீர்தேக்கத்தில் குப்பைகள் அதிகரிக்கப்பட்டு சூழல் மாசடைவு ஏற்பட்டதனாலும் களனி கங்கைக்கு செல்லும் இந்த நீரில் மாசு தன்மை ஏற்பட்டுள்ளதாலும் இந்த காசல்ரீ நீர்தேகத்தில் கரையோர பகுதிகள் மற்றும் நீரேந்தும் பகுதிகளில் நிரம்பி இருக்கும் குப்பைகளை சேகரிக்கும் வேலைத்திட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இவ் வேலைத்திட்டத்தினை அட்டன்இ வட்டவளை மற்றும் நோர்வூட் பொலிஸார் மற்றும் சிவில் அமைப்பினர், கடற்படையினர், ஆகியோர் ஒன்றிணைந்து மேற்கொண்டனர்.

இதன்போது நீர்தேகத்தின் கரையோர பகுதியில் துர்நாற்றத்தை வீசக்கூடிய நிலையில் காணப்பட்ட குப்பைகளை அகற்றும் பணி விறுவிறுப்பாக முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நீதி கோரி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்



சர்வதேச மனித உரிமை தினத்தையிட்டு வடக்கு-கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நீதி கோரி மட்டக்களப்பு காந்தி பூங்கவிற்கு முன்னால் நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு-கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான முன்னாள் ஞா. சிறிநேசன், பா.அரியேந்திரன், ஒய்வு பெற்ற மட்டு அரசாங்க அதிபர் மா. உதயகுமார், மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் காணாமல் போன உறவுகள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது சர்வதேசமே இலங்கை அரசுக்கு துணைபோகாதே. அச்சுறுத்தாதே அச்சுறுத்தாதே. புலனாய்வாளர்களால் அச்சுறுத்தாதே. இலங்கை அரசே ஒப்படைக்கப்பட்டு சரணடைந்த உறவுகள் எங்கே?, ஐ.நாவே ஓ.எம்.பியை திணிக்க இலங்கை அரசுக்கு துணைபோகாதே.இலங்கை அரசே எமது உறவுகளுக்கும் மதிப்பளி போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பி சுமார் ஒருமணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டகாரர்கள் பின் அங்கிருந்து விலகிச் சென்றனர்.

# சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் மரணத்தில் சந்தேகம் - மக்கள் போராட்டம்



டயகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டயகம மேற்கு தோட்டம் 5ஆம் பிரிவில் கடந்த திங்கட்கிழமை அன்று மாலை 5 மணியளவில் சாமிநாதன் தங்கேஸ்வரி என்ற 53 வயதுடைய பெண் ஆற்றில் சடலமாக மீட்கப்பட்டார். இவரின் மரணத்தில் சந்தேகம் நிலவுவதாக தெரிவித்து நேற்று குறித்த தோட்டத்தில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த தோட்டத்தில் சுமார் 100 பேர் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வீதிக்கு இறங்கி பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி கறுப்பு கொடி பிடித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தோட்டத்தில் உள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு முன்பாக பேரணியாக வந்து, குறித்த பெண் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

பொலிஸார் சரியான விசாரணை முன்னெடுத்து அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் பிரேத பரிசோதனையின் போது இறந்தவரின் உடலை பார்க்கவிடாமல் பெட்டியினை திறக்கப்படாமல் நல்லடக்கம் செய்ய பொலிஸார் அனுமதி வழங்கியதாகவும், ஆற்றில் மிதந்த சடலம் உடையின்றி கிடந்தமையால் இதில் சந்தேகம் நிலவுவதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

சந்தேகத்துக்கு இடமான இந்த செயலில் நீதி வேண்டும், முறைகேடான விடயங்கள் நடந்திருப்பின் சட்டத்தின் முன் குற்றவாளியை முன்னிருத்தப்பட வேண்டும் என்பதையும், பிரேத பரிசோதனை அறிக்கை திருப்தி இல்லை எனவும், இது தொடர்பான அறிக்கை பொலிஸாரால் உறவினர்களுக்கு வழங்கப்படவில்லை எனவும் போராட்டகாரர்கள் மேலும் தெரிவித்தனர்.

எனவே பொலிஸார் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# விறகு சேகரிக்கச் சென்ற பெண்ணை 4 நாட்களாக தேடியும் தகவல் இல்லை



நுவரெலியா - வலப்பனை கும்புக்வெல பகுதியில் விறகு சேகரிக்கச் சென்ற பெண் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

கும்புக்வெல மெதிலந்த பகுதியில் வசித்த 72 வயதான பீ.எம். டிங்கிரி மெனிக்கா என்ற மூதாட்டியே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

அவர் கடந்த திங்கட்கிழமை காலை 9.30 மணி அளவில் வீட்டுக்கு அருகில் உள்ள காட்டு பகுதிக்கு விறகு சேகரிக்க சென்றுள்ளார்.அவர் இதுவரை வீடு திரும்பாத நிலையில் அவரின் புதல்வர்களும் பிரதேச மக்களும் தேடி வருகின்றனர்.

இது தொடர்பில் அருகில் உள்ள தெரிபே பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸாரும் இணைந்து தேடுதலை முன்னெடுத்த போதிலும் மூதாட்டியை கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளது.

எனினும் கடந்த புதன் கிழமைமுன்னெடுத்த தேடுதலில் குறித்த பெண் விறகு வெட்டுவதற்காக எடுத்துச் சென்ற கத்தியை கண்டுபிடித்தனர்.அதனை தொடர்ந்து பின்னர், அருகில் உள்ள காட்டில் தேடிய போது, உடைந்த மரக் குற்றியில் குறித்த மூதாட்டி அணிந்திருந்த உடையும், விறகு தூக்கும் போது தலையில் வைத்துக் கொள்ள எடுத்துச் சென்ற சேலையும் கண்டெக்கப்பட்டுள்ளது. எனினும் மூதாட்டியை கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளது.

இதனால் மோப்ப நாய்களை பயன்படுத்தி மூதாட்டியை கண்டுபிடிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

எனினும் இதுவரை காணாமல் போன டிங்கிரி மெனிக்கா தொடர்பில் எந்த தகவலும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# இந்தியாவை உலுக்கிய ஹெலிகொப்டர் விபத்து; நேரில் அஞ்சலி செலுத்தினார் பிரதமர் மோடி



இந்தியாவின் முப்படைகளின் தலைமைத் தளபதி ஜெனரல் பிபின் ராவத் உள்ளிட்ட 13 பேரின் உடல்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி நேரில் அஞ்சலி செலுத்தினார்.

நீலகிரி மாவட்டம், குன்னூர் காட்டேரி மலைப்பாதையில் நடந்த இராணுவ ஹெலிஹொப்டர் விபத்தில், முப்படைகளின் தலைமைத் தளபதி ஜெனரல் பிபின் ராவத், அவர் மனைவி உட்பட மொத்தம் 13 பேர் உயிரிழந்தனர்.

மொத்தமாக பயணித்த 14 பேரில், 13 பேர் இறந்துவிட்ட நிலையில், ஒருவர் மட்டும் பெங்களூர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்றுவருகிறார். நாட்டையே சோகத்தில் ஆழ்த்திய இந்தச் சம்பவத்திற்கு இந்தியா மட்டுமல்லாமல் சர்வதேச நாடுகளின் தலைவர்களும், இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், உயிரிழந்த 13 பேரின் உடல்கள் டெல்லிக்கு கொண்டு செல்லப்பட்டு, பாலம் விமானப்படைத் தளத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

பிரதமர் நரேந்திர மோடி, ஜெனரல் பிபின் ராவத்தின் உடலுக்கு மலர்வளையம் வைத்தும், மதுலிக்கா மற்றும் இராணுவ அதிகாரிகள் உடல்கள் அடங்கிய பெட்டிகளுக்கு மலர்த்தூவியும், அஞ்சலி செலுத்தினார்.

# இந்தியாவில் 67 கோடி மக்களுக்கு ஒரே நாளில் கோவிட் தடுப்பூசி



இந்தியாவில் 67 கோடிக்கும் அதிகமானோருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக, மத்திய சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா தடுப்பூசிகளைச் செலுத்தும் பணிகள், கடந்த ஜனவரி மாதம் 16-ம் திகதி ஆரம்பமானது. இதில்,முன்களப் பணியாளர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கு, தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.

அதன்பின்னர், கடந்த ஜூனிலிருந்து இந்தியா முழுவதிலும் 18 வயது பூர்த்தியடைந்த அனைவருக்கும், தடுப்பூசிகளைச் செலுத்தும் பணிகள், தீவிரப்படுத்தப்பட்டன.

இந்நிலையில், இந்தியாவில் நேற்று முன்தினம் மட்டும் ஒரே நாளில், 67 கோடிக்கும் கூடுதலான கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.இதன்மூலம் இந்தியாவில், மொத்தம் 131 கோடி கொரோனா தடுப்பூசி டோஸ்கள், செலுத்தப்பட்டுள்ளதாக, மத்திய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

# அதிக சத்தத்துடன் பாடல் கேட்ட வாலிபருக்கு நேர்ந்த கதி

**-அடித்துக் கொலை செய்த அயலவர்-**




மகாராஷ்டிராவின் மும்பை மல்வானி நகரிலுள்ள, அம்புஜ்வாடி பகுதியைச் சேர்ந்த 40 வயதான சுரேந்திரகுமார், அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் தனது வீட்டிற்கு வெளியே நேற்று முன்தினமிரவு, ஒலிபெருக்கியை அதிக சத்தத்துடன வைத்து, பாடல் கேட்டுள்ளார்.அப்போது, சுரேந்திரகுமார் வசித்து வரும் வீட்டிற்கு அருகேயுள்ள, வீட்டில் வசித்து வரும் சாயிப் அலி சந்த் அலி ஷேக் என்ற வாலிபர் அங்கு வந்துள்ளார்.அந்த வாலிபர் சுரேந்திரகுமாரிடம் சத்தம் அதிகமாக உள்ளதாகவும், ஒலியின் அளவைக் குறைத்து வைக்கும்படியும் கேட்டுள்ளார்.

ஆனால், பாட்டுச் சத்தத்தை குறைக்க முடியாதென சுரேந்தர் கூறியுள்ளார். இதனால் இருவருக்குமிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதம் முற்றிய நிலையில், சுரேந்திரக்குமாரை சாயிப் அலி கடுமையாகத் தாக்கியுள்ளார். மேலும், அவரை கீழே தள்ளி, தலையை தரையில் மோதியுள்ளார். சாயிப் அலி தாக்கியதில், சுரேந்திரகுமார் இரத்த வெள்ளத்தில் சரிந்து வீழ்ந்துள்ளார்.

உடனடியாக, அக்கம்பக்கத்தினர் சுரேந்திரகுமாரை மீட்டு, அருகிலுள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக அறிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக, வழக்குப்பதிவு செய்த பொலிஸார், சாயிப் அலியைக் கைது செய்து, சிறையிலடைத்துள்ளனர்.

# காதல் தகராறினால் மாணவர்கள் மோதல்; மூன்று நாட்களுக்கு மூடப்பட்ட கல்லூரி

தமிழகத்திலுள்ள குடியாத்தம் அரச கல்லூரியில், காதல் தகராறினால் மாணவர்கள் மோதிக்கொண்ட விவகாரத்தில் மூன்று நாட்கள் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்டம், குடியாத்தம் காந்திநகரில் அரசாங்க கலை, அறிவியல் கல்லூரி உள்ளது.

இங்கு பி.எஸ்சி முதலாமாண்டு படிக்கும் மாணவியொருவரை, அதே கல்லூரியில் படிக்கும் மூன்று மாணவர்கள், ஒரு தலையாக காதலித்துள்ளனர். நேற்று முன்தினம் மூன்று மாணவர்களும், மாணவிக்கு ரோஜாப்பூ கொடுத்த போது, அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டு, மோதிக் கொண்டனர்.

சக மாணவர்கள் தடுத்த நிலையில், நேற்று முன்தினம் காலை மீண்டும் மாணவர்கள் மூவரும் கல்லூரிக்கு வந்த போது, தகராறு ஏற்பட்டு உருட்டுக் கட்டையினால் அடித்துக் கொண்டனர். இவர்களுக்கு ஆதரவாக வெளியாட்கள் 50 பேர், கல்லூரி வளாகத்திற்குள் நுழைந்ததினால், மோதல் ஏற்பட்டது.

குடியாத்தம் பொலிஸார், அவர்களை விரட்டியடித்தனர். இதையடுத்து, ஐந்து மாணவர்கள் பாடசாலையிலிருந்து உடனடியாக நீக்கப்பட்டனர். மேலும், மோதல்கள் ஏற்படாமலிருக்க, நேற்று முன்தினம் முதல், மூன்று நாட்களுக்கு கல்லூரிக்கு விடுமுறையளிக்கப்பட்டுள்ளது.


# டெல்லியில் அதிகரிக்கும் காற்று மாசு; பொதுமக்கள் பெரும் அசௌகரியம்



காற்று மாசடைதலைக் கட்டுப்படுத்த புதுடெல்லி அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அத்தியாவசியம் இல்லாத சரக்குகளை ஏற்றி வரும் கனரக வாகனங்கள், டெல்லிக்குள் நுழையவும், கட்டுமானப் பணிகள், கட்டிடங்களை இடிக்கவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், டெல்லியில் காற்றின் தரக் குறியீடு “293" என்ற அளவில் மோசமாக உள்ளதாக, காற்றின் தரம், வானிலை முன்னறிவிப்பு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு தெரிவித்துள்ளது.டெல்லியில் தொடரும் காற்று மாசுபாட்டின் காரணமாக, பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

# விண்வெளிக்கு ஆளில்லா விண்கலங்களை அனுப்புவதற்குத் தயாராகும் இந்தியா



சுகன்யான் திட்டத்தை செயற்படுத்துவதற்கு முன்பு விண்வெளிக்கு இரண்டு ஆளில்லா விண்கலங்களை அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளதாக, ராஜ்யசபாவில் விண்வெளித் துறை இணை அமைச்சர் ஜிதேந்திரசிங் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுப் பரவலினால், இந்தியாவின் விண்வெளித் திட்டங்கள் தாமதமாகியுள்ளன. நாட்டின் 75 வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு, ககன்யான் திட்டத்தின் கீழ், 2022ல் மனிதர்களை விண்வெளிக்கு அனுப்புவதற்கு, திட்டமிடப்பட்டது.

ஆனால்,கொரோனா காரணமாக இத்திட்டத்தை செயற்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அதனால்,2022 இறுதியில் அல்லது 2023ல், ககன்யான் திட்டத்தில் மூன்று பேர், விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்படுவார்களெனவும், அதற்கு முன்னதாக, இரண்டு ஆளில்லா விண்கலங்கள், விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்படுமெனவும், அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில், வாயுமித்ரா என்ற பெயரில், இரண்டு ரோபோக்கள் அனுப்பி வைக்கப்படும். வியாழன் திட்டத்தை அடுத்த ஆண்டிலும், ஆதித்யா திட்டம் எனப்படும் சூரியத் திட்டத்தை, 2029லும் செயற்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும், இந்தியா சார்பில், 2030ல் விண்வெளி மையம் அமைப்பதற்குத் திட்டம் வகுக்கப்படுவதாகவும், விண்வெளித்துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவில் சர்வதேச விமான சேவைகளுக்கான தடை நீடிப்பு




சர்வதேசப் பயணிகள் விமான சேவைகளுக்கான தடையை எதிர்வரும் ஜனவரி 31, 2022 வரை நீட்டித்து, சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் அறிவித்துள்ளது.

கொரோனா பரவலினால், இந்தியாவில் சர்வதேசப் பயணிகள் விமானப் போக்குவரத்து கடந்த ஆண்டு மார்ச் 23 ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டது. பின்னர் நோய்த்தொற்று குறைவடைந்த நிலையில், கட்டுப்பாடுகளுடன் சில குறிப்பிட்ட நாடுகளுக்கு மட்டும், சிறப்பு சர்வதேச விமானங்களாக இயக்கப்பட்டு வந்தது.

இதற்கிடையில், சர்வதேசப் பயணிகள் விமானங்களை, டிசம்பர் 15 முதல் வழக்கம் போல ஆரம்பிப்பதற்கு இந்தியா திட்டமிட்டிருந்தது.இந்த நிலையில், கொரோனாவின் புதிய வகையான ஒமிக்ரோன் பரவலைக் கருத்திற் கொண்டு, மத்திய அரசு மீண்டும் சர்வதேசப் பயணிகள் விமானங்களுக்கான தடையை நீட்டிக்க முடிவு செய்தது.

அதன்படி, சர்வதேசப் பயணிகள் விமானங்களுக்கான தடையை, எதிர்வரும் ஜனவரி 31, 2022 வரை நீட்டித்து, சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் அறிவித்துள்ளது.

மேலும், சர்வதேசப் சரக்கு விமானப் போக்குவரத்து மற்றும் குறிப்பிட்ட நாடுகளுக்கு கட்டுப்பாடுடன் மேற்கொள்ளும் விமானப்போக்குவரத்து சேவைகள் தொடருமெனவும், மத்திய பயணிகள் விமானப் போக்குவரத்து அமைச்சகம் அறிவித்துள்ளது.

# சக்தி வாய்ந்த 100 பெண்களின் பட்டியலில் மீண்டும் இடம்பிடித்த நிர்மலா சீதாராமன்




அமெரிக்காவின் ஃபோர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள உலகின் சக்தி வாய்ந்த 100 பெண்களின் பட்டியலில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தொடர்ந்து 3வது முறையாக இடம்பெற்றுள்ளார்.

அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரை தலைமையிடமாகக் கொண்டு வெளியாகி வரும், வணிக இதழான ஃபோர்ப்ஸ் பத்திரிகை ஆண்டுதோறும் உலகின் சக்தி வாய்ந்த 100 பெண்களின் பட்டியலை, வெளியிட்டு வருகின்றது.

இந்த வருடம் ஃபோர்ப்ஸ் தனது 18வது ஆ;ண்டிற்கான பட்டியலை வெளியிட்டுள்ளது. அதில், 40 பெண் தலைமை அதிகாரிகள், 19 உலகத் தலைவர்கள் மற்றும் ஒரு நோய் எதிர்ப்பு நிபுணர், நன்கொடையாளர்கள், கொள்கை வடிவமைப்பாளர்கள் உட்பட பலரும் இடம் பெற்றுள்ளனர்.

உலகின் சக்தி வாய்ந்த 100 பெண்களின் பட்டியலை, வெறும் பணம் மற்றும் அவர்களின் பதவியை மட்டும் வைத்து முடிவு செய்யவில்லை எனத் தெரிவித்துள்ள ஃபோர்ப்ஸ் பத்திரிகை, பொதுத்தளத்தில் சிறப்பாகச் செயற்பட்டு வரும் பெண்களையும் இணைத்துள்ளதாகக் கூறியுள்ளது. மேலும், 20 புதிய முகங்களையும் இந்தப் பட்டியலில், இணைத்துள்ளதாகவும், ஃபோர்ப்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது. அதற்கு உதாரணமாக, BioN-Tech நிறுவனத்தின் இணை நிறுவுனரும், நோயெதிர்ப்பு நிபுணரான Ozlem TUreci 48 வது இடத்தைப் பிடித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளது. அவர் ஒரு பயோடெக் நிறுவனத்தில் இணைந்ததற்காக மட்டுமல்ல, உலகளாவிய மருந்து தயாரிப்பு நிறுவனமான ஃபைசர் உடன் இணைந்து, mRNA கோவிட் தடுப்பூசியை மேம்படுத்துவதில், அவர் செலுத்திய மிகப்பெரிய சேவையைக் கணக்கில் கொண்டே, அவர் 48வது இடத்தைப் பிடித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்தப் பட்டியலில், மத்திய நிதி அமைச்சரான நிர்மலா சீதாராமன், தொடர்ந்து 3வது முறையாக இடம் பிடித்துள்ளார். 2019ல் 34வது இடமும், 2020ல் 41வது இடமும் வழங்கப்பட்ட நிலையில், 2021ம் ஆண்டிற்கான பட்டியலில், நிர்மலா சீதாராமன் 37வது இடத்தைப் பிடித்து, மீண்டும் முன்னேறியுள்ளார்.நிர்மலா சீதாராமனைத் தவிர, எம்.சி.எல். நிறுவன தலைமை செயலதிகாரி ரோஷினி நாடார் மல்கோத்ரா 52வது இடத்திலும், பயோகான் செயல் தலைவர் கிரண் மஜும்தார் ஷா 72வது இடத்திலும், நைகா நிறுவனர் பல்குனி நய்யார் 88வது இடத்தையும், பெற்றுள்ளனர்.

# கேரளாவில் பரவிய பறவைக் காய்ச்சல்; 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாத்துக்கள் உயிரிழப்பு



கேரளாவின் ஆலப்புழாவில் வாத்து, கோழி உள்ளிட்ட பறவைகளை பொதுமக்கள் வளர்த்து வருகிறார்கள்.

இப்பறவைகளுக்கு அடிக்கடி பாதிப்புகள் ஏற்பட்டு அவை உயிரிழக்கும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்றன. சமீபத்தில் 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாத்துக்கள் உயிரிழந்தன.

இது தொடர்பாக கால்நடைத் துறை அதிகாரிகள் மற்றும் மருத்துவர்கள் ஆலப்புழாவிற்குச் சென்று ஆய்வு நடத்தினர். இறந்து போன பறவைகளின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வுகள் செய்யப்பட்டன. இதில்,அவற்றிற்கு பறவைக் காய்ச்சல் தொற்றியிருப்பது, தெரியவந்தது.

இதையடுத்து, ஆலப்புழா மாவட்ட ஆட்சியாளர் அலெக்சாண்டர், பறவைக் காய்ச்சல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தடுப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்கு உத்தரவிட்டார். மேலும், நோயினால் பாதிக்கப்பட்ட பறவைகளை உடனடியாகப் புதைக்கவும், ஏற்பாடு செய்தார்.

பறவைப் பண்ணைகள் அதிகமாகவுள்ள பகுதியில் இது தொடர்பான உடனடி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது. மேலும், ஆலப்புழா மாவட்டத்தில் சம்பக்குளம், நெடுமுடி, முட்டார், வியாபுரம், கருவட்டா, திருக்குன்றாபுழா, ஆலப்புழா தெற்கு, வடக்குப் பகுதிகள் மற்றும் எடத்துவா, ஹரிப்பாடு ஆகிய பகுதிகளில், வாகனங்கள் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தப் பகுதிகளில் ஒரு கிலோமீட்டர் சுற்றளவிற்கு, பொதுமக்கள் யாரும் தேவையின்றிச் செல்ல வேண்டாமெனவும், கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ஆலப்புழாவிலுள்ள நீர் நிலைகளுக்கு வரும் பறவைகளைக் கண்காணிக்கவும், வனத்துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், இந்தப் பகுதியில் சுகாதாரத் துறையினரும் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# ஸ்கொட்லாந்தில் வேகமாக அதிகரிக்கும் ஓமிக்ரோன்; பொதுமக்களுக்கு அவசர வேண்டுகோள்

ஓமிக்ரோன் கொவிட் வைரஸ் பரவலின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், ஸ்கொட்லாந்தில் கிறிஸ்மஸ் விழாக்களை இரத்துச் செய்யுமாறு பொதுமக்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஓமிக்ரோனினால் ஏற்படும் பல தொற்றுப் பரவல்கள், கிறிஸ்மஸ் விருந்துகளுடன் இணைக்கப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்த நிலையில், இவ் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பொதுச் சுகாதார அறிவியல் இயக்குனர் டாக்டர் நிக் ஃபின் இது குறித்து தெரிவிக்கும் போது, திட்டங்களை ஒத்தி வைப்பது நம்மைப் பாதுகாத்துக் கொள்ள உதவுமெனவும்,


நீங்கள் தடுப்பூசியைப் பெறுவது, உங்கள் பூஸ்டரைப் பெறுவது, நீங்கள் முகக்கவசங்கள் உபயோகிப்பது, உங்களால் முடிந்த வரை வீட்டிலிருந்து வேலை செய்வது, மிகவும் பாதுகாப்பானதெனக் கூறினார்.




ஸ்கொட்லாந்தில் ஓமிக்ரோன் தொற்றுகள் வேகமாக உயருமென, தான் எதிர்பார்ப்பதாக முதலமைச்சர் இந்த வார ஆரம்பத்தில், கூறியிருந்தார். ஓமிக்ரோன் கொரோனா தொற்றுடைய நபரொருவர் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்டார்.

சமீபத்திய புள்ளிவிபரங்களின்படி, ஸ்கொட்லாந்தில் ஓமிக்ரோன் தொற்றுடையவர்களின் எண்ணிக்கை மொத்தம் 109ஆக உள்ளது. இருப்பினும், தொற்றுகளின் உண்மையான எண்ணிக்கை மிக அதிகமாக இருக்குமென, எதிர்பார்க்கப்படுகின்றது. நேற்றுக் காலையுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில், ஸ்கொட்லாந்தில் 16 கொரோனா வைரஸ் இறப்புகளும், 3,196 புதிய தொற்றுகளும் பதிவாகியுள்ளன.

## சர்வதேசப் பயணக் கட்டுப்பாடுகளை மேலும் அதிகரித்தது இஸ்ரேல்



கொரோனா வைரஸின் ஓமிக்ரோன் வைரஸ் நாட்டிற்குள் நுழைவதைத் தடுக்கும் முயற்சியில், அனைத்து வெளிநாட்டவர்கள் மீதான நுழைவுத் தடை உட்பட அதன் கடுமையான பயணக் கட்டுப்பாடுகளை, மேலும் பத்து நாட்களுக்கு நீடித்து, இஸ்ரேல் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இஸ்ரேலின் பிரதமர் நெஃப்டாலி பென்னட் மற்றும் சுகாதார அமைச்சர் நிட்சன் ஹொரோவிட்ஸ் ஆகியோர் வெளியிட்ட அறிக்கையில், இஸ்ரேலின் சர்வதேச விமான நிலையத்திற்கு வரும் பயணிகளுக்கான கட்டுப்பாடுகள், குறைந்தபட்சம் டிசம்பர் 22 ஆம் திகதி வரை வரை நீடிக்கும்.

தற்போதைய தேவைகளின்படி, வெளிநாட்டிலிருந்து திரும்பும் அனைத்து இஸ்ரேலியர்களும், எதிர்மறையான கொரோனா வைரஸ் பிசிஆர் சோதனை முடிவை உறுதிப்படுத்தும் வரை, சுய தனிமைப் படுத்தப்பட வேண்டும்.

அதே சமயம் அதிக ஆபத்துள்ள நாடுகளிலிருந்து வருபவர்கள் எதிர்மறையான முடிவுகளைப் பெறும் வரை, அரசாங்கம் நிர்வகிக்கும் தனிமைப்படுத்தப்பட்ட ஹோட்டலில் தனிமைப்படுத்தப்பட வேண்டும். எதிர்வரும் நாட்களில், தடுப்பூசிகளை வழங்குவதற்கான, கூடுதல் கட்டுப்பாடுகள் மற்றும் ஊக்கத்தொகைகள் விதிக்கப்படலாமெனவும், அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவில் முதன்முதலில் கண்டறியப்பட்ட, மிகவும் பிறழ்ந்த ஓமிக்ரோன் கொரோனா வைரஸ் தாக்கத்திற்குள்ளான, குறைந்தது 21 நபர்களை இஸ்ரேல் கண்டறிந்துள்ளது. 9.3 மில்லியன் மக்கள் வசிக்கும் இஸ்ரேல், கொரோனா தொற்று நோய் ஆரம்பமானதிலிருந்து, கொரோனா வைரஸினால், 8,210 இறப்புகளைப் பதிவு செய்துள்ளது.

அதன் பெரும்பாலான மக்கள்தொகையில், 6.3 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் குறைந்தபட்சம் ஒரு டோஸ் ஃபைசர் ஃ பயோஎன்டெக் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர், மேலும் 4 மில்லியனுக்கும் அதிகமான இஸ்ரேலியர்கள் பூஸ்டர் தடுப்பூசியையும் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## வியட்நாமில் விற்பனையாகும் தங்கமுலாம் பூசப்பட்ட இறைச்சி

**-விரும்பி உண்ணும் வாடிக்கையாளர்கள்-**

வியட்நாமில் உள்ள உணவகமொன்றில் தங்க முலாம் பூசப்பட்ட இறைச்சி விற்பனை செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.இதன் விலை நபர் ஒருவருக்கு, வியட்நாமீஸ் டாங் மதிப்பின் படி, 100,3108 ₫ ஆகும்.



வியட்நாம் - ஹனோய் நகரில் கடந்த இரு வாரங்களுக்கு முன்பு இந்த உணவகம் திறக்கப்பட்டது. தங்க முலாம் பூசப்பட்ட இறைச்சியை அப்படியே அடுப்பில் வைத்து சமைப்பதை, வாடிக்கையாளர்கள் நேரில் காணவும், அதனைப் படம்பிடிக்கவும் அந்த உணவகத்தில் அனுமதிக்கப்படுகின்றனர். இந்த தங்க இறைச்சியின் விலை மட்டுமல்ல, சுவையும் நன்றாக இருப்பதாக வாடிக்கையாளர்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

## ரஷ்யாவில் மீண்டும் கோரத் தாண்டவமாடும் கொரோனா ஒரே நாளில் 1,181 பேர் மரணம்



ரஷ்யாவில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வரும் நிலையில், கடந்த 24 மணி நேரத்தில் சுமார் 1,181 பேர் உயிரிழந்தது, பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு சீனாவில் தோன்றிய வைரஸ், தற்போது உலக நாடுகள் முழுவதிலும் கோரத்தாண்டவமாடி வருகின்றது. உலகளவில் கொரோனா வைரஸ் பாதித்த முதல் நாடாக அமெரிக்காவே உள்ளது.

இதைத்தொடர்ந்து இந்தியா இரண்டாவது இடத்திலும், பிரேசில் மூன்றாவது இடத்திலும் உள்ளன. கொரோனா அதிகம் பாதித்த நாடுகளில் ஒன்றான ரஷ்யாவில் கடந்த சில மாதங்களாக கொரோனா வைரஸ் அதி வேகமாகப் பரவி வருகின்றது.

இந்நிலையில், நேற்றுக் காலையுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில், புதிதாக 30,209 பேருக்கு கொரோனா வைரஸ் உறுதியாகியுள்ளது. இதன் மூலம் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை, 99 லட்சத்தையும் தாண்டியுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றினால், 1,181 பேர் உயிரிழந்தமையினால், அங்கு பலியானோர் எண்ணிக்கை 2.86 லட்சத்தைக் கடந்துள்ளது. தற்போது 10 லட்சத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள், மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாக, அந்நாட்டு சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

## ஓரினச் சேர்க்கையாளர்களின் திருமணத்திற்கு ஒப்புதலளித்தது சிலி நாடாளுமன்றம்



பாரம்பரியமாக கத்தோலிக்க தேசமான, சிலியில் தன்பாலின திருமணத்தை அனுமதிக்கும் முக்கிய சட்டத்திற்கு, ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தினால், அங்கீகரிக்கப்பட்ட இந்தச் சட்டம், தன்பாலின தம்பதிகள் குழந்தைகளைத் தத்தெடுக்க உதவுகின்றது.

இந்தச் சட்டத்தை ஜனாதிபதி செபஸ்டியன் பினோரா ஆதரித்தார். அவர் அதைச் சட்டமாகக் கையெழுத்திட வேண்டும். ஆனால், இந்தச் சட்டம் அவருடைய பழைமைவாதக் கூட்டணி உறுப்பினர்களின் விமர்சனத்திற்கு உள்ளாகியது.


சிலியின் எல்.ஜி.பி.டி சமூகத்தைச் சேர்ந்தவர்கள், நீண்டகாலமாக இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென வலியுறுத்தி வருகின்றார்கள். ஆனால், 2017-ம் ஆண்டு முதல் நாடாளுமன்றம் இந்தச் சட்டத்தினை இயற்றவிடாமல் முடக்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

## பென்சில்வேனிய மாநிலப் பல்கலையின் தலைவராக இந்திய வம்சாவளிப் பெண்மணி

அமெரிக்காவில் பென்சில்வேனியா மாநிலப் பல்கலைக்கழகத்தின் 19-வது தலைவராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பேராசிரியை நீலி பெண்டாபுடி நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் இந்தப் பல்கலைக்கழகத்தின் முதல் பெண் தலைவர் ஆவார்.

ஆந்திரா மாநிலம் விசாகப்பட்டினத்தில் பிறந்த இவர், 1986-ம் ஆண்டு தனது மேற்படிப்பை அமெரிக்காவில் நிறைவு செய்தார். தற்போது, கென்டக்கியில் உள்ள லூயிஸ்வில்லே பல்கலைக்கழகத்தில் சந்தைப்படுத்துதல் துறையின் தலைவராகவும், பேராசிரியராகவும் பணியாற்றி வருகின்றார். இந்நிலையில், பென்சில்வேனியா மாநில அறங்காவலர் குழுவினால் அவர் ஒருமனதாக மாநில பல்கலைக்கழகத்தின் 19-வது தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அடுத்த வருட ஆரம்பத்தில், பதவியேற்பார் எனவும், கூறப்படுகின்றது. நீலி பெண்டாபுடி, கல்வித்துறையில் ஏறக்குறைய 30 வருடங்கள் சேவையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## எதிர்காலத் தலைமுறையின் நலனுக்காக அறிமுகமாகும் நியூஸிலாந்து அரசின் தனித்துவமான புதிய சட்டம்



புகைப் பிடிப்பதை முடிவுக்கு கொண்டு வருவதற்கு, ஒரு தனித்துவமான சட்டத்தை, நியூஸிலாந்து அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தச் சட்டம், 14 வயது மற்றும் அதற்கு குறைவானவர்கள் வாழ்நாள் முழுவதும் புகைப் பிடிப்பதனை தடை செய்கின்றது. அடுத்த ஆண்டு முதல் அமுலுக்கு வரும் இந்தச் சட்டம், ஆண்டுதோறும் சிகரெட் வாங்குவதற்கான குறைந்தபட்ச வயதை அதிகரிப்பதற்கு வகை செய்யும்.

இந்தச் சட்டம் அமுலுக்கு வந்து, 65 ஆண்டுகளுக்குப் பின்னரும் கடைகளுக்குச் சென்று சிகரெட் வாங்க முடியும். ஆனால், அவர்கள் தங்களுக்கு 80 வயதாகி விட்டது என்பதற்கான ஆதாரத்தை வழங்க வேண்டும். ஆனால், நடைமுறையில் பல தசாப்தங்களுக்கு முன்பாகவே, சிகரெட் பிடிக்கும் பழக்கம் மறைந்து விடுமென, அதிகாரிகள் நம்புகின்றனர்.

இதன்மூலம் 2008ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிறந்தவர்கள், சிகரெட்டுகளோ, பிற புகையிலை பொருட்களையோ, தங்கள் வாழ்நாளில் வாங்க முடியாமல் போய் விடும்.

2025ஆம் ஆண்டுக்குள் அந்த நாட்டில் புகைபிடிப்போரின் எண்ணிக்கையை சதவீதமாக குறைப்பதற்கு இந்தச் சட்டம் வழிகாட்டுமென, எதிர்பார்க்கப்படுகின்றது.

## நயகரா நீர்வீழ்ச்சியிலிருந்து மீட்கப்பட்டது பெண்ணின் சடலம்

நயகரா நீர்வீழ்ச்சியில் மூழ்கியிருந்த காரிலிருந்து, சடலமொன்று ஹெலிகொப்டர் மூலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்த நீர்விழ்ச்சி கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்திற்கும், ஐக்கிய அமெரிக்காவின் நியுயோர்க் மாநிலத்திற்கும்; இடையேயான எல்லையாகக் கருதப்படுகின்றது.குறித்த நீர்வீழ்ச்சியில் கார் ஒன்று மிதந்து கொண்டிருந்த போது, ஹெலிகொப்டரிலிருந்து கயிற்றின் உதவியுடன் அந்த இடத்திற்குச் சென்ற பாதுகாப்புப் படையினர், சடலத்தை மீட்டுள்ளனர்.

இதேவேளை, அமெரிக்க கரையோரப் பாதுகாப்புப் பிரிவு படைவீரர் ஒருவரே இவ்வாறு சடலத்தை மீட்டுள்ளார்.கடுமையான நீரோட்டம் இருந்த நிலையில், குறித்த சடலத்தை குறித்த படைவீரர் போராடி மீட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. சடலமாக மீட்கப்பட்டவர், 61 வயதான ஓர் பெண் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவீனத்தினால் திணறிவரும் கனேடியர்கள்

**-ஆய்வில் வெளியான தகவல்-**



கனடாவில் உணவுப் பொருட்களின் விலைகள் அடுத்த வருடத்தில் மேலும் அதிகரித்து, வாழ்க்கைச் செலவீனம் உயருமென, எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதனால் வருடாந்தம் சராசரி 14,767 டொலர்களை உணவுப் பொருட்களுக்காக செலவிடும் 4 பேர் கொண்ட கனேடியக் குடும்பமொன்று 2022 ஆம் ஆண்டில் உணவுக்காக 966 டொலர்களை கூடுதலாகச் செலுத்த வேண்டி ஏற்படுமென, புதிதாக வெளியிடப்பட்ட உணவு விலைகள் குறித்த, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொற்று நோய் நெருக்கடியினால் ஏற்பட்டுள்ள, விநியோகச் சங்கிலி சீர்குலைவு மற்றும் பாதகமான காலநிலை என்பன, உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பிற்கு காரணமாக அமையுமெனவும், குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2022இல் உணவுப் பொருட்களின் விலைகளில் சுமார் 7 வீத அதிகரிப்பு ஏற்படுமெனவும், கணிக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு முதலே கனடாவில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களின் விலைகளும் அதிகரித்து வருகின்றன. தொற்று நோய் நெருக்கடி, இதனை மேலும் துரிதப்படுத்திவிட்டது.

இந்நிலையில், உணவுப் பொருட்களின் விலைகள் கண்டபடி அதிகரித்து வருவது, கனடாவில் உணவுப் பாதுகாப்பின்மைக்கு வழிவகுக்குமென, எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே பொருளாதார நெருக்கடியில் சிக்கித் திண்டாடிவரும் கனேடியர்களுக்கு, உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு, மேலும் நெருக்கடியை ஏற்படுத்துமென,கனேடிய முதன்மை எழுத்தாளரும் டல்ஹவுசி பல்கலைக்கழகத்தின் உணவு விநியோகம் மற்றும் கொள்கைப் பேராசிரியருமான பேராசிரியர் சில்வைன் சார்ல் போயிஸ் குறிப்பிட்டார்.

# மெக்சிகோவில் கோர விபத்து; 49 பேர் ஸ்தலத்தில் பலி

தெற்கு மெக்சிகோவில், சியாபாஸ் மாநில நகரை நோக்கி பொருட்களை ஏற்றிச்செல்லும் லொறியில் 107 பேர் சென்றனர். அப்போது, லொறியானது கட்டுப்பாட்டை இழந்து, நெடுஞ்சாலையிலுள்ள, நடைபாதைப் பாலத்தில் மோதி பயங்கர விபத்துக்குள்ளானது.

இதில், சம்பவ இடத்திலேயே, 49 பேர் உயிரிழந்தனர். மேலும், காயமடைந்த 58 பேரில் படுகாயங்களுடன் உயிருக்குப் போராடிய 40 பேர் உள்ளூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து குறித்து நடத்திய முதற்கட்ட விசாரணையில், லொறியிலிருந்தவர்கள் மத்திய அமெரிக்காவிலிருந்து புலம்பெயர்ந்தவர்களாக இருக்கலாமெனக் கருதப்படுகின்றது.



ஆனால், தப்பிப்பிழைத்தவர்கள் சிலர் தமது அயல் நாடான குவாத்தமாலாவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்துள்ளனர். அதனால், அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களென்று, இன்னும் உறுதி செய்யவில்லை.

விபத்திற்குள்ளான சரக்கு வாகனத்தில், சுமார் 107 பேர் பயணம் செய்துள்ளனர். அதிகளவில் மனிதர்களை ஏற்றிச் சென்றதனால், எடை தாங்காமல் வாகனம் கவிழ்ந்திருக்கலாமெனவும், மேலும், வாகனம் விபத்துக்குள்ளானபோது இன்னும் அதிகமான புலம்பெயர்ந்தோர் இருந்ததாக, குடிவரவு முகவர்களினால், தடுத்து வைக்கப்படுவார்களென்ற பயத்தில் தப்பியோடிவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

இந்த விபத்தில் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாமெனவும் அஞ்சப்படுகின்றது.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.